DBS

Live more, Bank less

# மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

# (MOST IMPORTANT TERMS AND CONDITIONS)

# DBS BANK கிரெடிட் கார்டுகள்- மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்
# (DBS BANK CREDIT CARDS- MOST IMPORTANT TERMS AND CONDITIONS)

“மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்” (“MITC”) மற்றும் இதில் உள்ள தகவல்கள் அனைத்தும், எல்லா DBS கிரெடிட் கார்டுகள் (”கிரெடிட் கார்டு(கள்)”)- கார்டு மெம்பர்கள்/கார்டுதாரர்கள்/கிரெட்டிட் கார்டு விண்ணப்பதாரர்கள்/ DBS Bank India Limited (‘DBS Bank’/‘வங்கி’) வாடிக்கையாளர்கள், வங்கியின் கிரெடிட் கார்டு குறித்து ஆர்வம் காட்டும் பொதுமக்கள், கிரெடிட் கார்டு பயன்படுத்துபவர்கள் மற்றும் அவற்றின் பயனாளிகள் அனைவருக்கும் உடனடியாகப் பொருந்தும். MITC ஆனது வங்கியின் விருப்பப்படியும், பொருந்தும் சட்டங்களின்படி தேவையானவாறும், அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டது. MITC ஆனது, கார்டு மெம்பர் ஒப்பந்தத்துக்குக் கூடுதலானது, அதை மட்டுப்படுத்துவது அல்ல என்பதுடன், வங்கியின் கார்டு மெம்பர் ஒப்பந்தத்தின் (’TC’) விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும். ஒருவேளை MITC மற்றும் TC ஆகியவை உங்களுக்கு ஏற்புடையதாக இல்லை எனில், தயவுசெய்து கிரெடிட் கார்டை பயன்படுத்த வேண்டாம், VantageCareIndia@dbs.com (DBS Vantage Card)/ cardcareindia@dbs.com (பிற DBS கிரெடிட் கார்டுகள்) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி எங்களுக்குத் தெரியப்படுத்துவதுடன், கிரெடிட் கார்டை மேக்னெடிக் ஸ்ட்ரிப்பின் குறுக்கே பாதியாக வெட்டி பயனற்றதாக்கிவிட்டு, அதன் துண்டுகளை கிரெடிட் கார்டு கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள் எங்களுக்குத் திருப்பித் தரவும். கிரெடிட் கார்டைப் பயன்படுத்துவது MITC & TC ஆகியவற்றை ஒப்புக்கொண்டதாகக் கருதப்படும்.

**A. கட்டணங்கள் மற்றும் கட்டணச் செலவுகள் (FEES AND CHARGES)**

(i) வருடாந்திரக் கட்டணம் மற்றும் புதுப்பிப்புக் கட்டணம்

| **கார்டு பெயர்** | **கார்டுதாரர் வேரியண்ட்** | **சேர்க்கைக் கட்டணம்*** | **வருடாந்திர க் கட்டணம்*** | **அடுத்த வருடத்துக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம்/புதுப் பிப்புக் கட்டணங்கள் தள்ளுபடி ஆவதற்குச் செய்யவேண்டிய குறைந்தபட்ச செலவு*** |
|---|---|---|---|---|
| DBS Vantage Card | DBS நான் ட்ரெஷர்ஸ் வாடிக்கையாளர்கள் | ரூ. 50,000 | ரூ. 50,000 | ரூ. 10,00,000 |
| | DBS எலைட் வாடிக்கையாளர்கள் | ரூ. 10,000 (கிடைக்கும் பணப்பலன் ரூ.40 ஆயிரம்) | ரூ.10,000 (கிடைக்கும் பணப்பலன் ரூ.40 ஆயிரம்) | |
| | DBS ட்ரெஷர்ஸ் வாடிக்கையாளர்கள் | ரூ. 20,000 (கிடைக்கும் பணப் பலன் ரூ.30 ஆயிரம்) | ரூ.20,000 (கிடைக்கும் பணப் பலன் ரூ.30 ஆயிரம்) | |

| | | | | |
|---|---|---|---|---|
| DBS Spark கிரெடிட் கார்டு | Spark5 | 499 | 499 | ரூ. 1,50,000 |
| | Spark10 | 999 | 999 | ரூ. 2,00,000 |
| | Spark20 | 1499 | 1499 | ரூ. 2,50,000 |
| Bajaj Finserv DBS Bank SuperCard^ | Bajaj Finserv DBS Bank 5X Rewards SuperCard | 499 | 499 | பொருந்தாது |
| | Bajaj Finserv DBS Bank 5X Plus Rewards SuperCard | 999 | 999 | பொருந்தாது |
| | Bajaj Finserv DBS Bank 7X Rewards SuperCard | 1499 | 1499 | பொருந்தாது |
| | Bajaj Finserv DBS Bank 7X Plus Rewards SuperCard | 1999 | 1999 | பொருந்தாது |
| | Bajaj Finserv DBS Bank 10X Signature SuperCard | 2999 | 2999 | பொருந்தாது |
| | Bajaj Finserv DBS Bank 10X Plus Signature SuperCard | 4999 | 4999 | பொருந்தாது |
| DBS SuperX கிரெடிட் கார்டு | DBS SuperX கிரெடிட் கார்டு | பொருந்தாது | 1499 | பொருந்தாது |
| DBS SuperX Plus கிரெடிட் கார்டு | DBS SuperX Plus கிரெடிட் கார்டு | பொருந்தாது | 2999 | பொருந்தாது |

*கட்டணங்கள் மற்றும் கட்டணச் செலவுகள் மீது பொருத்தமான ஜிஎஸ்டி கூடுதலாக விதிக்கப்படும்.

^DBS Bank-யால் Bajaj Finance Limited உடன் இணை முத்திரை கூட்டாண்மையாக வழங்கப்பட்ட Bajaj Finserv DBS Bank SuperCard, <டிசம்பர் 1, 2025> முதல் நிறுத்தப்பட்டு, கார்டுதாரர்களுக்கு DBS Bank ஆல் DBS SuperX கிரெடிட் கார்டு அல்லது DBS SuperX Plus கிரெடிட் கார்டு வழங்கப்படும். கார்டுதாரர்கள் DBS Bank-யிலிருந்து மின்னஞ்சல்/எஸ்எம்எஸ் வழியே கூடுதல் விவரங்களுடன் தகவல் பெறுவார்கள்.

விதிக்கப்படும் கட்டணமானது, கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் சமயத்தில் அல்லது அந்த கிரெடிட் கார்டுக்கான காப்பீடு அல்லது புதுப்பித்தலின்போது கார்டு மெம்பருக்குத் தெரிவிக்கப்பட்டவாறு இருக்கும். மேலும், பொருந்தும் அந்தக் கட்டணமானது கார்டு மெம்பரின் கணக்கில் நேரடியாக வசூலிக்கப்படுவதுடன், அது வசூலிக்கப்பட்ட மாதத்துக்கான கிரெடிட் கார்டு கணக்கு அறிக்கையில் பில் செய்யப்படும்.

DBS Bank, கார்டு மெம்பருக்கு 30 நாட்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்துவிட்டு, தான் பொருத்தமானது எனக் கருதுமாறு அவ்வப்போது ஏதாவது புதிய கட்டணங்கள் அல்லது கட்டணச் செலவுகளை மாற்ற அல்லது புதிதாய் அறிமுகப்படுத்தும் உரிமையைத் தன்வசம் வைத்துள்ளது.

(ii) பிற கட்டணங்கள் மற்றும் கட்டணச் செலவுகள்

| | |
|---|---|
| நிதியுதவி/ஓவர் டியூ வட்டி கட்டணங்கள்/ஆனுவலைஸ்டு பெர்சண்டேஜ் ரேட் (APR) | நிதியுதவி கட்டணங்கள்/ APR என்பது பொருட்களை வாங்குதல், முன் பணங்கள் மற்றும் நிலுவையிலுள்ள, செலுத்தவேண்டிய தவணைகள் மீது விதிக்கப்படும் வட்டி விகிதம் ஆகும் (குறைந்தபட்ச தவணைத் தொகை மற்றும் மொத்தத் தவணை தொகைகளுக்கு இடைப்பட்ட |

<table>
<tr>
<td></td>
<td>
தொகை கட்டணமாகச் செலுத்தப்பட்டால் விதிக்கப்படும்)<br>
கட்டண தவணைத் தேதியன்று அல்லது அதற்கு முன் குறைந்தபட்ச தவணைத் தொகை (MAD) செலுத்தப்படாமல் இருந்தால் ஓவர்டியூ வட்டி கட்டணங்கள் விதிக்கப்படும். நீட்டிக்கப்பட்ட கிரெடிட் மற்றும் கேஷ் அட்வான்ஸ்கள் மீது பின்வருமாறு ஓவர் டியூ வட்டி விதிக்கப்படும்:
<table>
<tr><td>DBS Vantage Card</td><td rowspan="3">வருடத்துக்கு<br># 42 - 48%</td><td rowspan="3">மாதத்துக்கு<br>3.5% - 4%</td></tr>
<tr><td>Bajaj Finserv DBS Bank கிரெடிட் கார்டு</td></tr>
<tr><td>DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு</td></tr>
<tr><td>DBS Spark கிரெடிட் கார்டு</td><td>வருடத்துக்கு<br>48%</td><td>மாதத்துக்கு<br>4%</td></tr>
</table>
#கார்டு மெம்பரின் கிரெடிட் வரலாறு, பொருட்கள் வாங்கும் முறைகள், பணம் செலுத்தும் முறை, பயன்பாட்டு முறைகள், விசுவாசம், வங்கியின் விண்டேஜ் மற்றும் உட்புறக் கொள்கை அளவீடுகளின் ஆகியவற்றின் அடிப்படையில் பைனான்ஸ்/ஓவர் டியூ வட்டி விகிதங்கள் விதிக்கப்படும். ஆனால் அவை மட்டுமே இல்லை. DBS Bank-யின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் பைனான்ஸ் (வட்டி) விகிதங்கள் மாதம் ஒன்றுக்கு 4% வரை (வருடத்துக்கு 48%) மாறலாம்/அதிகரிக்கலாம் அல்லது மாதம் ஒன்றுக்கு 3.5% வரை (வருடத்துக்கு 42%) மாறலாம்/குறையலாம், என்பதுடன், அதுவே இறுதியானதாகவும், கார்டு மெம்பரைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.
</td>
</tr>
<tr>
<td>உங்கள் கார்டின் மீது விதிக்கப்படும் தாமதக் கட்டணத் தொகைகள் (LPC) என்பது கட்டண தவணைத் தேதி (PDD) அன்று மொத்த தவணைத் தொகை (TAD) ஐ பொருத்து அமையும்</td>
<td>
<table>
<tr><td>மொத்த தவணைத் தொகை*</td><td>தாமதக் கட்டணத் தொகைகள்</td></tr>
<tr><td>ரூ. வரை 100</td><td>ஒன்றும் இல்லை</td></tr>
<tr><td>ரூ.100க்கு மேல் ரூ.500 க்குள்</td><td>ரூ. 99</td></tr>
<tr><td>ரூ.500க்கு மேல் ரூ.5,000 க்குள்</td><td>ரூ. 499</td></tr>
<tr><td>ரூ.5000க்கு மேல்</td><td>ரூ.5,000க்கு மேல் உள்ள மொத்த தவணைத் தொகையில் 10%, அதிகபட்சமாக ரூ. 1299</td></tr>
</table>
*ஒருவேளை ஒரு வாடிக்கையாளர் செலுத்தும் பகுதியளவு தொகை MADஐ விடக் குறைவாக
</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>இருப்பின், செலுத்தப்பட்ட பகுதியளவு தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கட்டண தவணைத் தேதி (PDD) அன்று TAD இன் படி LPC கணக்கிடப்படும்.</td></tr>
<tr><td>சார்ஜ் ஸ்லிப் ரிட்ரைவல் கட்டணங்கள்</td><td>ரூ. 100</td></tr>
<tr><td>கார்டை மாற்றுதல் (தொலைந்துபோதல்/திருடுபோதல்/மீண்டும்-வழங்கல்/வேறு எதற்காவது மாற்றுதல்)</td><td><table>
<tr><td>DBS Vantage Card</td><td>ரூ. 3000 மறுபடி-வழங்கப்பட்ட அட்டை ஒன்றுக்கு</td></tr>
<tr><td>DBS Spark கிரெடிட் கார்டு</td><td rowspan="3">ரூ. 200 மறுபடி-வழங்கப்பட்ட அட்டை ஒன்றுக்கு</td></tr>
<tr><td>Bajaj Finserv DBS Bank SuperCard</td></tr>
<tr><td>DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு</td></tr>
</table></td></tr>
<tr><td>காகித வடிவ கணக்கு அறிக்கை/காகித வடிவ கணக்கு அறிக்கையை மீண்டும் அச்சிடுவதற்கான கட்டணம்</td><td>ரூ. 100 ஒரு கணக்கு அறிக்கைக்கு</td></tr>
<tr><td>திரும்புதல் கட்டணங்கள் (காசோலை திரும்புதல், செக் பவுன்ஸ், நிலையான அறிவுறுத்தல் தோல்வி, ஆட்டோமேட்டட் கிளியரிங் ஹவுஸ், போதிய இருப்பு இன்மை ஆகியவற்றை உள்ளடக்கும், ஆனால் இவை மட்டுமே இல்லை.)</td><td>ரூ. 500 ஒரு நிகழ்வுக்கு</td></tr>
<tr><td>கிளைகளில் செலுத்தப்படும் கட்டணம்</td><td>DBS Bank கிளைகளில் பணமாகச் செலுத்தப்படும் கிரெடிட் கார்டு கட்டணம் ஒன்றுக்கு ரூ.250/-</td></tr>
</table>

<table>
<tr>
<td>எரிபொருள் கூடுதல் கட்டணம் மற்றும் எரிபொருள் கூடுதல் கட்டணம் தள்ளுபடி – எரிபொருள் வாங்குவதற்காக பெட்ரோல் பம்புகளில் செய்யப்படும் பரிவர்த்தனைக்கு**</td>
<td>வணிகருக்கு POS முனையத்தை வழங்கும் கையகப்படுத்தும் வங்கியால் எரிபொருள் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. எரிபொருள் நிலையம் மற்றும் அவர்களின் கையகப்படுத்தும் வங்கி ஆகியவற்றைப் பொருத்து கூடுதல் கட்டண விகிதம் மாறக்கூடும். DBS Bank-யின் எரிபொருள் கூடுதல் கட்டண தள்ளுபடியானது கீழுள்ள அட்டவணைப்படி நிர்ணயிக்கப்பட்ட வரம்பின் அடிப்படையில், தகுதியான எரிபொருள் பரிவர்த்தனைத் தொகைகளின் 1% ஆக இருக்கும். எரிபொருள் கூடுதல் கட்டணம் மீதான ஜிஎஸ்டி திரும்பப் பெறப்படாது.
<table>
<tr><th>தயாரிப்பு</th><th>தகுதியான எரிபொருள் பரிவர்த்தனைத் தொகை</th><th>அதிகபட்ச எரிபொருள் கூடுதல் கட்டண தள்ளுபடி</th></tr>
<tr><td>DBS Vantage Card</td><td>குறைந்தபட்ச எரிபொருள் பரிவர்த்தனைகள் ரூ. 1000 மற்றும் அதிகபட்சம் ரூ. 6000</td><td>வரம்புத் தொகை ரூ. 200 பில்லிங் சைக்கிள் ஒன்றுக்கு</td></tr>
<tr><td>DBS Spark கிரெடிட் கார்டு</td><td rowspan="3">குறைந்தபட்ச எரிபொருள் பரிவர்த்தனைகள் ரூ. 400 மற்றும் அதிகபட்சம் ரூ. 4000</td><td rowspan="3">வரம்புத் தொகை ரூ. 100/150/200 பில்லிங் சைக்கிள் ஒன்றுக்கு (தயாரிப்புக்கான கார்டு வேரியண்டைப் பொருத்தது, விவரங்களுக்கு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும்)</td></tr>
<tr><td>Bajaj Finserv DBS Bank SuperCard</td></tr>
<tr><td>DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு</td></tr>
</table>
</td>
</tr>
<tr>
<td>வாடகைப் பரிவர்த்தனைகள் மீதான கட்டணம்**</td>
<td>பரிவர்த்தனைத் தொகையின் 1% அல்லது ரூ. 199, இதில் அதிகமான தொகை, வாடகைக்குப் பொருந்தும் (மெர்ச்சண்ட் கேட்டகரி கோடு (“MCC”) – 6513)</td>
</tr>
<tr>
<td>பயன்பாட்டு பரிவர்த்தனைகள் மீதான கட்டணம்**</td>
<td>ஒரு கணக்கு அறிக்கை காலத்தில் பயன்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட ஒட்டுமொத்தத் தொகையில் 1%, பயன்பாடு MCC</td>
</tr>
</table>

<table>
<tr><td>(DBS Vantage Card-க்குப் பொருந்தாது)</td><td>(4900) கீழ் குறியிடப்பட்ட வணிகர்களுக்கு ஒரு கணக்கு அறிக்கைக் காலத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ.20,000 அல்லது அதிகம் எனில்</td></tr>
<tr><td>எரிபொருள் பரிவர்த்தனைகள் மீதான கட்டணம்**<br><br>(DBS Vantage Card-க்குப் பொருந்தாது)</td><td>பரிவர்த்தனைத் தொகையின் 1% அல்லது ரூ. 199, இதில் அதிகமான தொகை, ரூ. 15,000 அல்லது அதற்கு அதிகம், எரிபொருள் வகை MCCஇன் கீழ் குறியிடப்பட்ட வணிகர்களுக்கு (எரிபொருள் மெர்ச்சண்ட் கேட்டகரி கோடு -1361, 5172, 5541, 5542, 5983, 9752)</td></tr>
<tr><td>கல்விக்கான கட்டணங்கள் மீதான கட்டணம்**<br><br>(DBS Vantage Cardக்குப் பொருந்தாது)</td><td>பரிவர்த்தனைத் தொகையின் 1% அல்லது ரூ. 199, இதில் அதிகமான தொகை, மூன்றாம் தரப்பு செல்பேசி செயலிகள்/ CRED, PayTM, Cheq, Mobikwik போன்ற இணையதளங்கள் (ஆனால் அவை மட்டுமே இல்லை) மூலம் செலுத்தப்படும் கட்டணங்கள் மீது. கல்லூரி/பள்ளி இணையதளங்கள் அல்லது அவர்களது விற்பனையிட இயந்திரங்கள் (POS) மூலம் செலுத்தப்படும் கட்டணங்களைப் பொருத்தவரையில், அத்தகைய பரிவரித்தனைகள் மீது கூடுதல் கட்டணங்கள் எதுவும் கிடையாது. சர்வதேச கல்விக் கட்டணங்களுக்கு இந்தக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எஜுகேஷன் மெர்ச்சண்ட் கேட்டகரி கோடு – 8211, 8220, 8241, 8244, 8249, 8299 ஆகியவற்றுக்குப் பொருந்தும்</td></tr>
<tr><td>வெளிநாட்டு பணப் பரிவர்த்தனை (ஃபாரெக்ஸ் மார்க் அப்)</td><td><table>
<tr><td rowspan="2">DBS Vantage Card</td><td>சிங்கப்பூரில் 0% மற்றும்</td></tr>
<tr><td>அனைத்து வெளிநாட்டு பரிவர்த்தனைகளுக்கும் (சிங்கப்பூர் தவிர) 1.75% பரிவர்த்தனைக் கட்டணம் விதிக்கப்படும்.</td></tr>
<tr><td>DBS Spark கிரெடிட் கார்டு</td><td rowspan="3">பரிவர்த்தனைத் தொகையில் 3.5%</td></tr>
<tr><td>Bajaj Finserv DBS Bank SuperCard</td></tr>
<tr><td>DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு</td></tr>
</table>
இந்தப் பரிவர்த்தனைத் தொகையில், வெளிநாட்டுப் பரிவர்த்தனைகளை இந்தியப் பணமாக மாற்றுவதற்காக Visa-வுக்குச் செலுத்தப்படும் கட்டணங்களும் அடங்கும்.</td></tr>
</table>

| | |
|---|---|
| | தயவுசெய்து கருத்தில் கொள்ளவும்: வணிகர் இந்தியாவில் இருந்தாலும்கூட, வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வணிக நிறுவனங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகள், Visa/ MasterCard/RuPay ஆகியவற்றிலிருந்து பொருந்தும் விகிதங்களில் கட்டணம் விதிக்கப்படும், அது உங்களது கணக்கு அறிக்கையிலுள்ள பரிவர்த்தனைத் தொகையின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.<br><br>பொருத்தமான ஒழுங்குமுறை ஆணையங்களால் விதிக்கப்படும் பொருளாதாரத் தடைகளுடன் இணங்க DBS Bank உறுதிபூண்டுள்ளது. அதன்படி, அத்தகைய தடைகளுக்கு உட்பட்ட நாடுகளில் எங்களது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்பதுடன், இந்த நாடுகளை உள்ளடக்கும் பரிவர்த்தனைகளை செயல்படுத்தமாட்டோம். போன் பேங்கிங், ஃபேசிஸ்மைல் ட்ரான்ஸ்மிஷன் அல்லது மின்னஞ்சல்கள் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவோ, எங்களது இணையதளம் மற்றும் ஆன்லைன் பேங்கிங் ஆகியவற்றை அணுகவோ உங்களால் இயலாது என்பதுடன், நீங்கள் இந்த நாடுகளில் இருந்தால் எங்களால் உங்களுக்கு நிதிச் சேவைகளை வழங்க இயலாது என்பதையும் தயவுசெய்து கருத்தில் கொள்ளவும். இந்த நாடுகளை உள்ளடக்கிய கட்டணம் அல்லது வணிகப் பரிவர்த்தனைகளையும் நாங்கள் செயல்படுத்தமாட்டோம். பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ள நாடுகளின் தற்போதைய பட்டியலுக்கு எங்களது இணையதளம் ஒழுங்குமுறை வெளிப்படுத்தல் \| DBS Bank India Limited ஐ பார்வையிடவும். |
| வெகுமதி மீட்டெடுப்பு கட்டணம் | ரூ. 99+ஜிஎஸ்டி ஒவ்வொரு மீட்டெடுப்புக்கும் விதிக்கப்படும். |
| சரக்கு மற்றும் சேவை வரி | அவ்வப்போது பொருந்தும் விகிதங்களில் ஜிஎஸ்டி விதிக்கப்படலாம், தற்போது ஜிஎஸ்டி 18% என்ற விகிதத்தில் விதிக்கப்படுகிறது (அனைத்து கட்டணங்கள், வட்டி, கூடுதல் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களுக்கும் பொருந்தும்) |

**அவ்வப்போது வரையறுக்கப்படும் கேட்டகரிகள் என்பதற்கான விளக்கம் (எரிபொருள், வாடகை போன்றவை) Visa அல்லது MasterCard ஆகியவற்றால் அந்தந்த மெர்ச்சண்ட் கேட்டகரி கோடு ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்படும் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

**<u>எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கான முக்கியத் தகவல்கள்:</u>**

எல்லை தாண்டிய பரிவர்த்தனைகள் அனைத்தும் கார்டு மெம்பர் கணக்கில், கையகப்படுத்தும் நிறுவனம் DBS Bank-யில் கட்டணம் செலுத்திய நாளில் பொருந்தக்கூடிய, கையகப்படுத்தும் வங்கி ஒதுக்கும் மாற்ற விகிதங்களில் இந்திய ரூபாயாக மாற்றப்பட்ட பிறகு, கார்டு மெம்பர் கணக்கில் கட்டணம் விதிக்கப்படும் (இங்கு கையகப்படுத்தும் நிறுவனம் என்பது அந்தப் பரிவர்த்தனை நடந்த வணிகரின் டெர்மினல்/சாதனம்/இணையதளம் ஆகியவற்றைக் குறிக்கிறது). எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளின் மாற்றத்துக்கு பிற கட்டணங்கள் மற்றும் கட்டணச் செலவுகளில் குறிப்பிட்டவாறு கட்டணங்கள் விதிக்கப்படும். அமெரிக்க டாலர் தவிர பிற பணங்களில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு, பரிவர்த்தனைத் தொகையானது முதலில், நெர்வொர்க் பார்ட்னர் ஒதுக்கிய மாற்ற விகிதத்தில் அமெரிக்க டாலர்களாக மாற்றப்படும், அதன் பின்னர் பிற கட்டணங்கள் மற்றும் கட்டணச் செலவுகளில் குறிப்பிட்டவாறு பொருத்தமான கட்டணங்கள் விதிக்கப்பட்ட பிறகு இந்திய ரூபாயாக மாற்றப்படும்.

(iii) கேஷ் அட்வான்ஸ் கட்டணங்கள் பணம் எடுத்தல் கட்டணங்கள்:

| | |
|---|---|
| பணம் எடுத்தல் கட்டணங்கள் | நிலையான கட்டணம்: ரொக்கத் தொகையில் 2.5% (குறைந்தது ரூ. 500) |

இந்தியா மற்றும்/அல்லது வெளிநாடுகளில் உள்ள ஏடிஎம்-களுடன் கிரெடிட் கார்டுகளின் இணக்கத் தன்மைக்கு ஏற்ப, அந்த ஏடிஎம்-களிலிருந்து பணம் எடுப்பதற்குக் கார்டு மெம்பர் கிரெடிட் கார்டை பயன்படுத்தலாம். அவ்வாறு பணம் எடுத்தலுக்கு, மேலே குறிப்பிட்டவாறு பணம் எடுத்தல் கட்டணங்கள்/பரிவர்த்தனைக் கட்டணம் விதிக்கப்படுவதுடன், அவை அடுத்த/வரவிருக்கும் கிரெடிட் கார்டு கணக்கு அறிக்கையில் கார்டு மெம்பர் கணக்கில் ஏற்றப்படும். வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின்படி, பரிவர்த்தனைக் கட்டணம் மாற்றத்துக்கு உட்பட்டது. எடுக்கப்பட்ட பணம் கட்டண தவணைத் தேதியன்று முழுமையாகச் செலுத்தப்படவில்லை எனில், பரிவர்த்தனைத் தேதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு 4% அல்லது ஒரு வருடத்துக்கு 48% நிதியுதவி கட்டணங்கள் விதிக்கப்படும்.

(iv) குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு விதிக்கப்படும் சேவைக் கட்டணங்கள்

| | |
|---|---|
| சரக்கு மற்றும் சேவை வரி | தற்போது பொருந்துமாறு 18% & அவ்வப்போது திருத்தப்படும்விதமாக |

(v) வட்டி இல்லாத (சலுகை) காலம் – உதாரனங்களுடன் விளக்கப்படுகிறது, வட்டி இல்லாத (சலுகை) காலம் 20 நாட்கள் முதல் 50 நாட்கள் வரை இருக்கலாம் என்பதுடன், கட்டண தவணைத் தேதியிலிருந்து 3 நாட்களுக்கு சலுகைக் காலம் வழங்கப்படும். இருப்பினும், முந்தைய மாதத்தின் நிலுவைத் தொகை முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்படாமல் இருந்தால், அத்தகைய சலுகைக் காலம் பொருந்தாது.

உதாரணம்: ஒரு கணக்குக்கான கணக்கு அறிக்கைத் தேதி 20/11/2016 என்றால், கணக்கு அறிக்கைத் தேதியிலிருந்து 20 நாட்களாக இருக்கும் 10/12/2016 கட்டண தவணைத் தேதியாக இருக்கும், அது வட்டி இல்லாத சலுகைக் காலம் எனப்படும்.

(vi) ரிவால்விங் கிரெடிட் மற்றும் கேஷ் அட்வான்ஸ் ஆகிய இரண்டுக்குமான நிதியுதவி கட்டணங்கள்

முதன்மை கார்டு மெம்பர் மற்றும்/அல்லது ஏட்-ஆன் கார்டு மெம்பர் அத்தகைய பரிவர்த்தனைகளை மேற்கொண்ட தேதியிலிருந்து அவை முழுமையாகக் கட்டி முடிக்கப்படும் தேதி வரை. கேஷ் அட்வான்ஸ் உள்ளிட்ட அனைத்துக்கும் மாதாந்திர

சதவீத விகிதத்தில் நிதியுதவி கட்டணங்கள் செலுத்த வேண்டும். டிமாண்டு டிராஃப்ட்கள் ஆர்டர் செய்தல், பிற கிரெடிட் கார்டு கணக்குகளிலிருந்து பேலன்ஸ் ட்ரான்ஸ்பர் செய்தல் ஆகிவற்றுக்கும் நிதியுதவி கட்டணங்கள் சேரும். இந்தக் கட்டணங்கள், பணம் அல்லது ரொக்கத்துக்கு இணையான தொகை எடுக்கப்பட்ட தேதி மற்றும் பேங்கர்ஸ் செக் வழங்கப்பட்ட தேதியிலிருந்தும் விதிக்கப்படலாம். பொருட்கள் வாங்குவதற்கு, கட்டண தவணைத் தேதிக்குள் மொத்த நிலுவைத் தொகையும் முழுமையாகச் செலுத்தப்படவில்லை என்றால் மட்டுமே பைனான்ஸ் கட்டணங்கள் சேரும். பிற கிரெடிட் கார்டு கணக்குகளிலிருந்து பேலன்ஸ் ட்ரான்ஸ்பர் செய்வதாக இருந்தால், பேங்கர்ஸ் செக் வழங்கப்பட்ட தேதியிலிருந்து, ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட தொகைக்கும், கார்டு மெம்பரின் கார்டு கணக்கில் நிலுவையிலுள்ள எந்தவொரு கொள்முதல் தொகை மீதும் நிதியுதவி கட்டணங்கள் சேரும். செலுத்தப்படவேண்டிய நிதியுதவி கட்டணங்கள், ஒவ்வொரு கணக்கு அறிக்கைக் காலத்தின் கடைசி தேதியன்றும் உங்கள் கார்டு கணக்கில் பிடித்தம் செய்யப்பட்டு, உங்கள் கணக்கு அறிக்கையில் காட்டப்படும். கார்டு கணக்கு முடிக்கப்பட்டாலும், பணம் செலுத்தாத காரணத்தால் வாராக் கடன் நிலைக்குச் சென்றாலும், கார்டு கணக்கில் உள்ள நிலுவை முழுமையாகச் செலுத்தி முடிக்கப்படாதவரை மேலுள்ள நிதியுதவி கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய நிலையில் தொடரும். நீங்கள் பணம் செலுத்துவது, உங்களது பயன்பாடு, இண்டெர்னல் ரிஸ்க் ப்ரொஃபைலிங் மற்றும் சிபில் (CIBIL) போன்ற வெளிப்புற முகமைகள் வழங்கும் புள்ளிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் கட்டணங்களை மாற்ற முடியும்.

(vii) கிரெடிட் கார்டுகள் மீதான ஓவர்டியூ வட்டி

| | | | |
|---|---|---|---|
| நிதியுதவி கட்டணங்கள் (சில்லறை கொள்முதல் மற்றும் ரொக்கம்) | DBS Vantage Card | ஒரு வருடத்துக்கு 42- 48%# | ஒரு மாதத்துக்கு 3.5%-4% |
| | Bajaj Finserv DBS Bank SuperCard | | |
| | DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு | | |
| | DBS Spark கிரெடிட் கார்டு | வருடத்துக்கு 48% | மாதத்துக்கு 4% |

ஆனுவலைஸ்டு SNP (இஎம்ஜ) வட்டி விகிதம் (SNP ஸ்பிளிட் அண்டு பே)

| | | |
|---|---|---|
| பரிவர்த்தனை செய்பவர் | DBS Vantage Card | 29.5% வரை |
| | DBS Spark கிரெடிட் கார்டு | |
| | Bajaj Finserv DBS Bank SuperCard | 28% வரை |
| | DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு | |
| ரிவால்வர் | DBS Vantage Card | 39% வரை |
| | DBS Spark கிரெடிட் கார்டு | |
| | Bajaj Finserv DBS Bank SuperCard | |
| | DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு | |

வட்டித் தொகை அருகிலுள்ள முழு எண் மதிப்புக்கு முழுமையாக்கப்படும்.

உங்கள் கணக்குக்கு விதிக்கப்படும் விகிதத்தில் மாற்றம் ஏதாவது இருப்பின், அது அமலுக்கு வருவதற்குக் குறைந்தது 30 நாட்களுக்கு முன் உங்கள் கணக்கு அறிக்கையில் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். உங்களுக்குப் பொருந்தும் விகிதத்தை நீங்கள் எப்பொழுது தெரிந்துகொள்ள விரும்பினாலும், தயவுசெய்து எங்களது வாடிக்கையாளர் உதவி எண்ணில் எங்களை அழைக்கவும்:

DBS Vantage கார்டுதாரர்கள் - 1800 209 4555 அல்லது எங்களது வெளி நாட்டு வாடிக்கையாளர் சேவை எண் +9144 6685 4555 அல்லது கார்டுகள் உதவிமையம் (சிங்கப்பூர்) - 800 852 6186 அல்லது எங்களுக்கு எழுத வேண்டிய மின்னஞ்சல் முகவரி VantageCareIndia@dbs.com

பிற DBS கிரெடிட் கார்டுதாரர்கள் - 1860 267 6789 அல்லது எங்களுக்கு எழுத வேண்டிய மின்னஞ்சல் முகவரிcardcareindia@dbs.com

- மொத்த தவணைத் தொகையை கார்டு மெம்பர் ஒருவர் ஒவ்வொரு பில்லிங் சைக்கிளின்போதும், கட்டண தவணைத் தேதியன்று அல்லது அதற்கு முன் செலுத்தினால், நிதியுதவி கட்டணங்கள் விதிக்கப்படாது.
- கட்டண தவணைத் தேதியன்று அல்லது அதற்கு முன் செலுத்தப்படும் கட்டணமானது, மொத்த தவணைத் தொகையைவிடக் குறைவாக இருந்தால், கார்டு மெம்பர் ரிவால்விங் வசதியைப் பயன்படுத்துவதாகப் பொருள்படும். கார்டு மெம்பர் ஒருவர் ரிவால்விங் வசதியைப் பயன்படுத்தும்போது நிதியுதவி கட்டணங்கள் விதிக்கப்படும்.
- மொத்த தவணைத் தொகையை (ரிவர்சல் போன்றவற்றுக்கு சரிசெய்யப்பட்டது), கட்டண தவணைத் தேதிக்குள் கார்டு மெம்பர் செலுத்தும் வரை ரிவால்விங் வசதியைப் பயன்படுத்துவது தொடரும்.
- ஒரு கார்டு மெம்பர் ரிவால்விங் வசதியைப் பயன்படுத்துகிறாரா இல்லையா என்னும் நிலை, மாதந்திர கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண தவணைத் தேதியன்று மட்டுமே தீர்மானிக்கப்படும்.
- கார்டு மெம்பர், மொத்த தவணைத் தொகையை கட்டண தவணைத் தேதிக்குள் செலுத்தவில்லை என்றால், வட்டி இல்லாத கடன் காலம் இழக்கப்பட்டு, பின்வருவது பொருந்தும்:
- மொத்த தவணைத் தொகை (கட்டணங்கள்/ரீபண்டுகள்/திரும்பப் பெறப்பட்ட பரிவர்த்தனைகள் அவை அவ்வாறே வரவு வைக்கப்படும்போது சரி செய்யப்பட்டு) மீதும், கட்டணங்கள்/கட்டணச் செலவுகள் மற்றும் ஜிஎஸ்டி/வரிகள் தவிர பிற அனைத்து புதிய பரிவர்த்தனைகள் மீதும் (பரிவர்த்தனைத் தேதியிலிருந்து) முந்தைய நிலுவைத் தொகைகள் முழுமையாகச் செலுத்தப்படும் வரை வட்டி விதிக்கப்படும்
  - கார்டு மெம்பர் கடந்த கணக்கு அறிக்கையில் ரிவால்விங் வசதியைப் பயன்படுத்தியிருந்து, அந்த கணக்கு அறிக்கைக்கான மொத்த தவணைத் தொகையை கட்டண தவணைத் தேதிக்குள் செலுத்தினால், அத்தகைய கட்டணம் செலுத்தப்பட்ட தேதிவரை மட்டும், சென்ற கணக்கு அறிக்கையின் செலுத்தப்படாத நிலுவைத் தொகைக்கு நிதியுதவி கட்டணங்கள் விதிக்கப்படும். அத்தகைய சூழலில், கடந்த கணக்கு அறிக்கைக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட (அல்லது சேர்க்கப்பட்ட) பரிவர்த்தனைகள் மீது நிதியுதவிக் கட்டணங்கள் விதிக்கப்படாது.
  - தினசரி இருப்பின் மீது வட்டி கணக்கிடப்படும். கட்டணங்கள்/திரும்பப் பெறப்பட்டவை மற்றும் பிற வரவுகளால் தினசரி இருப்பு சரி செய்யப்படும்.
  - கார்டு கணக்கு முடிக்கப்பட்டாலும், கார்டு கணக்கில் உள்ள நிலுவை முழுமையாகச் செலுத்தி முடிக்கப்படாதவரை மேலுள்ள நிதியுதவி கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய நிலையில் தொடரும்.

குறைந்தபட்ச தவணைத் தொகையானது (MAD), ஆர்பிஐ சுற்றறிக்கையின்படி அவ்வப்போது வரையறுக்கப்படுமாறு, புதிய கொள்முதல்கள் மற்றும் பணம் எடுத்தல்கள் மற்றும் முன்பு செலுத்தப்படாத நிலுவையிலுள்ள ஏதாவது அசல் + அந்த மாதத்துக்கான புதிய இஎம்ஐ பிடித்தங்கள் அல்லது முன்பு செலுத்தப்படாத ஏதாவது இஎம்ஐ பிடித்தங்கள் + ஜிஎஸ்டி + விண்ணப்ப கட்டணம் + அனுமதிக்கப்பட்ட கடன் வரம்புக்கு மேல் பயன்படுத்தப்பட்ட தொகை + முன்பு செலுத்தப்படாத MAD + 100% ரிவால்விங் வட்டி + பணம் எடுத்தலுக்கான வட்டியின் 100% + பிற

கட்டணங்கள்/கட்டணச் செலவுகள், இருப்பின், அவற்றின் 2% எனக் கணக்கிடப்படும் (குறைந்தபட்சம் ரூ.100 என்பதற்கு உட்பட்டது).

வட்டி கணக்கீட்டின் உதாரணம். கட்டண தவணைத் தேதியன்று, நிலுவையிலுள்ள தொகையின் ஒரு பகுதி மட்டுமே செலுத்தப்பட்டால், வட்டி கணக்கீடு அட்டவணையில் காட்டப்பட்டவாறு இருக்கும்.

| பரிவர்த்தனை விவரங்கள் | | | |
|---|---|---|---|
| வ. எண் | தேதி | பரிவர்த்தனை | தொகை |
| A | 12-ஜூலை-21 | மின்னணு கொள்முதல் | ரூ. 6,000 |
| B | 26-ஜூலை-21 | வெளியில் உணவருந்துதல் | ரூ. 4,000 |
| C | 2-ஆகஸ்ட்-21 | கணக்கு அறிக்கைத் தேதி | மொத்த தவணைத் தொகை: ரூ. 10,000 |
| D | | | குறைந்தபட்ச தவணைத் தொகை: ரூ. 500 |
| E | 10-ஆகஸ்ட்-21 | மளிகைப் பொருட்கள் வாங்குதல் | ரூ. 4,000 |
| F | 15-ஆகஸ்ட்-21 | துணிகள் வாங்குதல் | ரூ. 2,000 |
| G . | 22-ஆகஸ்ட்-21 | கட்டண வரவு | ரூ. 500 |
| H | 2-செப்டம்பர்-21 | இஎம்ஐ (1/3. ஜிஎஸ்டி உள்பட) | ரூ. 1000 |
| I | 2- செப்டம்பர்-21 | கணக்கு அறிக்கைத் தேதி | மொத்த தவணைத் தொகை: ரூ. 17,192.72 |
| | | | குறைந்தபட்ச தவணைத் தொகை: ரூ. 2592.40 |

கீழுள்ளவாறு தவணைத் தொகை மீது வட்டி விதிக்கப்படும்:

தினசரி வட்டி= நிலுவைத் தொகை * (4%*12 மாதங்கள்)/365

மொத்த நிலுவைத் தொகையானது நிலுவைத் தொகை, புதிய கொள்முதல்கள், வட்டி கட்டணங்கள் (வட்டி கணக்கீடு கிழே விளக்கப்பட்டுள்ளது) மற்றும் வட்டி மீதான சரக்கு மற்றும் சேவை வரி ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

வட்டி கணக்கீடு:

| பரிவர்த்தனைத் தொகை | காலஅளவு | நாட்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| ரூ. 6,000 | 12 ஜூலை 2023 முதல் 21 ஆகஸ்ட் 2023 வரை | 41 | 323.51 |
| ரூ. 4,000 | 26 ஜூலை 2023 முதல் 21 ஆகஸ்ட் 2023 வரை | 27 | 142.03 |
| ரூ. 4,000 | 10 ஆகஸ்ட் 2023 முதல் 02 செப்டம்பர் 2023 வரை | 24 | 126.25 |
| ரூ. 2,000 | 15 ஆகஸ்ட் 2023 முதல் 02 செப்டம்பர் 2023 வரை | 19 | 49.97 |
| ரூ.9,500 (ரூ.500 கட்டணத்தை சரிசெய்த பிறகு மீதியுள்ள இருப்பு). | 22 ஆகஸ்ட் 2023 முதல் 02 செப்டம்பர் 2023 வரை | 12 | 149.92 |

குறிப்பு: இந்த அட்டவணை விளக்க நோக்கங்களுக்காக மட்டுமே.

“இதன்படி, விதிக்கப்படும் மொத்த வட்டி (நிதியுதவி கட்டணம் + தள்ளிவைக்கப்பட்ட நிதியுதவி கட்டணங்கள்): ரூ. 791.68 /-. கார்டு மெம்பர், முந்தைய மாதத்தின் நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்தவில்லை என்பதால், வருங்காலப் பரிவர்த்தனைகள் அனைத்துக்கும் பரிவர்த்தனை தேதியிலிருந்து வட்டி விதிக்கப்படும். ”வட்டித் தொகையின் மீது பொருத்தமான சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படும்.”

**விளக்கம் 1**:

| பரிவர்த்தனை விவரங்கள் | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **தேதி** | **பரிவர்த்தனை** | **தொகை** |
| A | 12-ஜூலை-24 | மின்னணு கொள்முதல் | ரூ. 6,000 |
| B | 26-ஜூலை-24 | சேர்க்கைக் கட்டணம் | ரூ. 1,000 |
| C | 26-ஜூலை-24 | சேர்க்கைக் கட்டணம் மீதான ஜிஎஸ்டி | ரூ. 180 |

| | | | |
|---|---|---|---|
| D | 02- ஆகஸ்ட்-24 | கணக்கு அறிக்கை தேதி (தவணைத் தேதி: 22- ஆகஸ்ட்-24) | மொத்த தவணைத் தொகை: ரூ. 7,180 |
| | | | குறைந்தபட்ச தவணைத் தொகை: ரூ. 1,300 |
| E | 10-ஆகஸ்ட்-24 | மளிகைப் பொருட்கள் வாங்குதல் | ரூ. 4,000 |
| F | 20-ஆகஸ்ட்-24 | பணம் எடுத்தல் | ரூ. 2000 |
| G . | 20-ஆகஸ்ட் -24 | பணம் எடுத்தல் கட்டணம் | ரூ. 500 |
| H | 20-ஆகஸ்ட் -24 | பணம் எடுத்தல் கட்டணம் மீதான ஜிஎஸ்டி | ரூ. 90 |
| I | 22-ஆகஸ்ட்-24 | கட்டண வரவு | ரூ. 1,300 |
| J | 01-செப்டம்பர்-24 | இஎம்ஐ (1/3. ஜிஎஸ்டி உள்பட) | ரூ. 1000 |
| k. | 02-செப்டம்பர்-24 | பணம் எடுத்தல் மீதான வட்டி | ரூ. 120.99 |
| L | 02-செப்டம்பர்-24 | பணம் எடுத்தல் மீதான வட்டிக்கான ஜிஎஸ்டி | ரூ. 21.78 |
| M | 02-செப்டம்பர்-24 | ரிவால்விங் வட்டி | ரூ. 621.66 |
| N | 02-செப்டம்பர்-24 | ரிவால்விங் வட்டி மீதான ஜிஎஸ்டி | ரூ. 111.90 |
| O | 02-செப்டம்பர் -24 | கணக்கு அறிக்கைத் தேதி | மொத்த தவணைத் தொகை: ரூ. 14,346.33 |
| | | | குறைந்தபட்ச தவணைத் தொகை: ரூ. 2,703.93 |

பின்வரும் விளக்கம் வட்டிக் கட்டணங்கள் கணக்கிடப்படும் முறையைக் காட்டுகிறது:

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில், முந்தைய மாத கணக்கு அறிக்கையில் செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகையானது, கட்டண தவணைத் தேதியன்று செலுத்தப்பட்டதாகவும், நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்றும் அனுமானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் 8-ம் தேதியே கணக்கு அறிக்கைத் தேதி ஆகும். இந்த அனுமானங்களின் அடிப்படையில், பின்வருமாறு வட்டி கணக்கிடப்படும்:

| **பரிவர்த்தனை** | **₹** |
|---|---|
| கொள்முதல் தேதி 20 செப்டம்பர், 2023 | 2,000.00 |
| கணக்கு அறிக்கை தேதியான 08 அக்டோபர், 2023 அன்று மொத்த தவணைத் தொகை | 2,000.00 |
| கணக்கு அறிக்கை தேதியான 08 அக்டோபர், 2023 அன்று குறைந்தபட்ச தவணைத் தொகை | 100.00 |
| பின்வரும் விளக்கம் வட்டிக் கட்டணங்கள் கணக்கிடப்படும் முறையைக் காட்டுகிறது:<br>கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில், முந்தைய மாத கணக்கு அறிக்கையில் | |

| | |
|---|---|
| செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகையானது, கட்டண தவணைத் தேதியன்று செலுத்தப்பட்டதாகவும், நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்றும் அனுமானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதியே கணக்கு அறிக்கைத் தேதி ஆகும். இந்த அனுமானங்களின் அடிப்படையில், பின்வருமாறு வட்டி கணக்கிடப்படும்: | |
| கொள்முதல் தேதி 15 அக்டோபர், 2023, வாடகை கட்டணம் | 2,000.00 |
| 15 அக்டோபர், 2023 அன்று வாடகை கட்டணம் மீதான வசதிக் கட்டணம் | 20.00 |
| வசதிக் கட்டணம் மீதான வரி | 3.60 |
| 29 அக்டோபர், 2023 அன்று விதிக்கப்பட்ட எல்பிசி (LPC) | 600 |
| LPC மீதான வரி | 108 |
| 08 நவம்பர், 2023 தேதியிட்ட கணக்கு அறிக்கையில், பின்வரும் வட்டிக் கட்டணங்கள் விதிக்கப்படும்: | |
| a) 20 செப்டம்பர், 2023 தேதியிட்ட பரிவர்த்தனை மீதான வட்டி | 123.29 |
| b) 15 அக்டோபர், 2023 தேதியிட்ட பரிவர்த்தனை மீதான வட்டி | 61.65 |
| c) வசதிக் கட்டணம் மீதான வட்டி – பயன்பாட்டுக்கு முன் | 0.56 |
| d) வசதிக் கட்டணம் மீதான வட்டிக்கான ஜிஎஸ்டி – பயன்பாட்டுக்கு முன் | 0.10 |

**விளக்கம் 2:**

கணக்கு அறிக்கை தேதி: 02-ஆகஸ்ட்-2024

குறைந்தபட்ச தவணைத் தொகை (MAD) = புதிய கொள்முதல்கள் மற்றும் பணம் எடுத்தல்கள் மற்றும் முன்பு செலுத்தப்படாது நிலுவையிலுள்ள ஏதாவது அசல் + அந்த மாதத்துக்கான புதிய இஎம்ஐ பிடித்தங்கள் அல்லது முன்பு செலுத்தப்படாத ஏதாவது இஎம்ஐ பிடித்தங்கள் + ஜிஎஸ்டி + விண்ணப்ப கட்டணம் + அனுமதிக்கப்பட்ட கடன் வரம்புக்கு மேல் பயன்படுத்தப்பட்ட தொகை + முன்பு செலுத்தப்படாத MAD + 100% ரிவால்விங் வட்டி + பணம் எடுத்தலுக்கான வட்டியின் 100% + பிற கட்டணங்கள்/கட்டணச் செலவுகள், ஆகியவற்றின் 2%

= (புதிய கொள்முதல்கள் மற்றும் பணம் எடுத்தல்கள் ஆகியவற்றின் 2% (6,000))+ஜிஎஸ்டி (180)+கட்டணம் (1,000)

= ரூ. 1,300

**விளக்கம் 3:**

**02-செப்டம்பர்-2024 தேதியிட்ட கணக்கு அறிக்கை**:

குறைந்தபட்ச தவணைத் தொகை (MAD) = புதிய கொள்முதல்கள் மற்றும் பணம் எடுத்தல்கள் மற்றும் முன்பு செலுத்தப்படாது நிலுவையிலுள்ள ஏதாவது அசல் + அந்த மாதத்துக்கான புதிய இஎம்ஐ பிடித்தங்கள் அல்லது முன்பு செலுத்தப்படாத ஏதாவது இஎம்ஐ பிடித்தங்கள் + ஜிஎஸ்டி + விண்ணப்ப கட்டணம் + அனுமதிக்கப்பட்ட கடன் வரம்புக்கு மேல் பயன்படுத்தப்பட்ட தொகை + முன்பு செலுத்தப்படாத MAD + 100%

ரிவால்விங் வட்டி + பணம் எடுத்தலுக்கான வட்டியின் 100% + பிற கட்டணங்கள்/கட்டணச் செலவுகள், ஆகியவற்றின் 2%

= (புதிய கொள்முதல்கள் மற்றும் பணம் எடுத்தல்கள் மற்றும் முன்பு செலுத்தப்படாது நிலுவையிலுள்ள ஏதாவது அசல் ஆகியவற்றின் 2% (4,000+2,000+5,800)) + ஜிஎஸ்டி (90+21.78+111.9) + இஎம்ஐ பிடித்தங்கள் (1,000) + கட்டணங்கள் (500) + (100% ரிவால்விங் வட்டி (621.66))+ (பணம் எடுத்தலுக்கான வட்டியின் 100% (120.99))

= ரூ. 2,703.93

(viii) செலுத்தத் தவறும் நிகழ்வில் விதிக்கப்படும் கட்டணங்கள்

உங்கள் கார்டின் மீது விதிக்கப்படும் தாமதக் கட்டணத் தொகைகள் என்பது கட்டண தவணைத் தேதி (PDD) அன்று மொத்த தவணைத் தொகையைப் பொருத்து அமையும். ஒருவேளை ஒரு வாடிக்கையாளர் செலுத்தும் பகுதியளவு தொகை MADஐ விடக் குறைவாக இருப்பின், செலுத்தப்பட்ட பகுதியளவு தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கட்டண தவணைத் தேதி (PDD) அன்று TAD இன் படி LPC கணக்கிடப்படும். கீழே கூறப்பட்டவாறு தாமதக் கட்டணத் தொகை விதிக்கப்படும்:

- ரூ.100 வரையிலான மொத்த தவணைத் தொகைக்கு எதுவும் இல்லை.
- ரூ.100க்கு மேல் ரூ.500 வரையிலான மொத்த தவணைத் தொகைக்கு ரூ.99.
- ரூ.500க்கு மேல் ரூ.5,000 வரையிலான மொத்த தவணைத் தொகைக்கு ரூ.499.
- ரூ.5,000க்கு மேல் உள்ள மொத்த தவணைத் தொகையில் 10%, அதிகபட்சமாக ரூ. 1299.

தாமதக் கட்டணத் தொகை கணக்கீட்டின் விளக்கங்கள்:

| **பரிவர்த்தனை** | **₹** |
|---|---|
| கொள்முதல் தேதி 20 செப்டம்பர், 2024 | 5,020.00 |
| 12 அக்டோபர், 2024 தேதியிட்ட கணக்கு அறிக்கையின் மொத்த தவணைத் தொகை | 5,020.00 |
| 12 அக்டோபர், 2024 தேதியிட்ட கணக்கு அறிக்கையின் குறைந்தபட்ச தவணைத் தொகை | 101.00 |
| கட்டண தவணைத் தேதி- 1 நவம்பர், 2024 | |
| 29 அக்டோபர், 2024 அன்று செலுத்தப்பட்ட தவணை | 95.00 |
| 1 நவம்பர், 2024 அன்று நிலுவையிலுள்ள தவணை | 4925.00 |
| தாமதக் கட்டணத் தொகை | 499.00 |
| தாமதக் கட்டணத் தொகை மீதான வரி | 89.82 |

(ix) எரிபொருள் பரிவர்த்தனைக்கான கட்டணம்:

நீங்கள் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ. 15,000 அல்லது அதிகமாக, ஃப்யூவல் கேட்டகிரி மெர்ச்சண்ட் கேட்டகிரி கோடுகளின் கீழ் குறிக்கப்பட்ட வணிகர்களிடம் செலவு செய்தால், அந்தப் பரிவர்த்தனைத் தொகையின் 1% அல்லது ரூ. 199, ஆகியவற்றில் அதிகமான தொகை உங்கள் கிரெடிட் கார்டுக்கு கட்டணமாக விதிக்கப்படும்.

விளக்கம்: நீங்கள் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ. 12,000 செலவிட்டால், அந்த எரிபொருள் பரிவர்த்தனைக்குக் கட்டணம் எதுவும் விதிக்கப்படாது. நீங்கள் ஒரு பரிவர்த்தனைக்கு

ரூ. 15,000 செலவிட்டால், உங்கள் அட்டைக்குக் கட்டணமாக ரூ. 199 + ஜிஎஸ்டி விதிக்கப்படும். நீங்கள் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ. 22,000 செலவிட்டால், உங்கள் அட்டைக்குக் கட்டணமாக ரூ. 220 (22,000 இன் 1%) + ஜிஎஸ்டி விதிக்கப்படும். எரிபொருள் மெர்ச்சண்ட் கேட்டகரி கோடுகள் - 1361, 5172, 5541, 5542, 5983, 9752 ஆகியவற்றுக்குப் பொருந்தும்

(x) கல்விக் கட்டணங்கள் மீதான கட்டணம் (DBS Vantage Card-க்குப் பொருந்தாது):

கல்லூரி/பள்ளி இணையதளங்கள் அல்லது அவர்களது விற்பனையிட இயந்திரங்கள் (POS) மூலம் தொடங்கப்படும் கட்டணங்களைப் பொருத்தவரையில், அத்தகைய பரிவரித்தனைகள் மீது கூடுதல் கட்டணங்கள் எதுவும் கிடையாது. மூன்றாம் தரப்பு செல்பேசி செயலிகள்/ CRED, PayTM, Cheq, Mobikwik போன்ற இணையதளங்கள் (ஆனால் அவை மட்டுமே இல்லை) மூலம் தொடங்கப்படும் கட்டணங்களுக்கு பரிவர்த்தனைத் தொகையின் 1% அல்லது ரூ. 199, ஆகியவற்றில் அதிகமான தொகை உங்கள் கிரெடிட் கார்டுக்கு கட்டணமாக விதிக்கப்படும். சர்வதேச கல்விக் கட்டணங்களுக்கு இந்தக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான மெர்ச்சண்ட் கேட்டகரி கோடுகள் 8211, 8220, 8241, 8244, 8249, 8299 ஆகியவற்றுக்குப் பொருந்தும்.

**(B) பணம் எடுத்தல் வரம்புகள் (WITHDRAWAL LIMITS)**

(a) கிரெடிட் வரம்பு: கிரெடிட் லிமிட் கார்டு என்பது கார்டுதாரர் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வரம்பே ஆகும். ஒவ்வொரு கார்டுதாரருக்கும் கிரெடிட் மற்றும் கேஷ் வரம்புகள் வெவ்வேறாக இருக்கும், கிரெடிட் கார்டு வழங்கும் சமயத்தில் அது தெரிவிக்கப்படுவதுடன், மாதாந்திர கணக்கு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(b) மீதமுள்ள கிரெடிட் வரம்பு: மொத்த கிரெடிட் லிமிட்டிலிருந்து பயன்படுத்தப்பட்ட லிமிட்டை கழிப்பதன் மூலம் மிதமுள்ள கிரெடிட் வரம்பு கணக்கிடப்படும். ஒவ்வொரு கார்டுதாரருக்கும் கிரெடிட் மற்றும் கேஷ் வரம்பு வெவ்வேறாக இருக்கும், அது மாதாந்திர கணக்கு அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

(c) பணம் எடுத்தலுக்கான வரம்பு: பணம் எடுத்தலுக்கான வரம்பு என்பது அந்தக் கார்டுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த கிரெடிட் லிமிட்டின் ஒரு துணைப்பகுதியாக இருக்கும். பணம் எடுத்தலுக்கான வரம்பு என்பது கிரெடிட் லிமிட்டில் 10% ஆகும். வெல்கம் கிட்டில் இந்த வரம்பு தெரிவிக்கப்படுவதுடன், மாதாந்திர கணக்கு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். DBS Bank தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரிலும், அவ்வப்போது DBS Bank தெரிவிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும், கார்டு மெம்பருக்கு கேஷ் லிமிட்டை வழங்கும்.

(d) ஒரு வாடிக்கையாளரின் ஒரே கணக்கிற்கு, பல கிரெடிட் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கு நிகழ்வில், எல்லா கிரெடிட் கார்டுகளிலும் சேர்த்துக் கணக்கிடப்பட்ட ஒட்டுமொத்த கிரெடிட் வரம்புக்குள் மட்டுமே செலவு செய்ய முடியும். ஒட்டுமொத்த கிரெடிட் வரம்பு என்பது வாடிக்கையாளர் வைத்திருக்கும் அனைத்து கிரெடிட் கார்டுகளிலும் உள்ள அதிகபட்ச வரம்பு என வரையறுக்கப்படுகிறது. ஒட்டுமொத்த கிரெடிட் வரம்புக்கு மேல் செய்யப்படும் எந்தவொரு பரிவரித்தனையும் நிராகரிக்கப்படும்.

(e) கார்டுதாரரின் கணக்கை DBS Bank அவ்வப்போது மீளாய்வு செய்யும் என்பதுடன், உள்புற அளவுகோல்களின் அடிப்படையில் கார்டுதாரரின் கிரெடிட் வரம்பு

மற்றும்/அல்லது கேஷ் வரம்பை குறைக்கும். கிரெடிட் வரம்பு மற்றும்/அல்லது கேஷ் வரம்பை அதிகரிப்பதற்கான கார்டுதாரரின் ஒப்புதலுக்கு, கார்டுதாரரின் முன்கூட்டிய எழுத்துபூர்வ ஒப்புதல் தேவைப்படுவதுடன், அது வழங்கப்படும் சமயத்தில் DBS Bank அது குறித்து கார்டுதாரருக்கு தெரியப்படுத்தும். கிரெடிட் வரம்பை அதிகப்படுத்த விரும்பும் கார்டுதொரர்கள், எங்களது 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை மையத்தை அணுகி அவர்களது வருமானத்தைத் தெரிவிக்கும் நிதிசார் ஆவணங்களை வழங்குவதன் மூலம் அவர்களது கிரெடிட் அளவை அதிகரிக்கலாம். வழங்கப்பட்ட அத்தகைய புதிய ஆவணங்களின் அடிப்படையிலும், தனது சொந்த விருப்பத்தின் பேரிலும், கார்டுதாரரின் கிரெடிட் வரம்பை DBS Bank அதிகரிக்கலாம்.

| **தயாரிப்பு** | **இந்தியா** | **வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை எண்** |
|---|---|---|
| DBS Vantage Card | 1800 209 4555 | +9144 6685 4555 அல்லது கார்டுகளுக்கான உதவி எண் (சிங்கப்பூர்) - 800 852 6186. |
| DBS Bank Spark கிரெடிட் கார்டு (அனைத்து கார்டு வேரியண்ட்கள்) | 1860 267 6789 | +9144 69046789 |
| Bajaj Finserv DBS Bank SuperCard (அனைத்து கார்டு வேரியண்ட்கள்) | 1860 267 6789 | +9144 69046789 |
| DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு | 1860 267 6789 | +9144 69046789 |

(f) உங்களது கிரெடிட் கார்டு ரத்து செய்யப்பட்டால், கிரெடிட் வரம்பு மற்றும் கார்டு கணக்கு முடிக்கப்படும்.

(g) உள்புற மீளாய்வின் அடிப்படையில் கார்டு மெம்பரின் கிரெடிட் வரம்பை வங்கியானது தனது சொந்த விருப்பத்தின் பேரில் அதிகரிக்கலாம் என்பதுடன், அவ்வாறு செய்யப்படும் சமயத்தில் கார்டு மெம்பருக்கு அது குறித்து தெரியப்படுத்தும். மேலும், கிரெடிட் வரம்பில் ஏதாவது அதிகரிப்பு இருப்பின், கார்டுதாரரின் முன்கூட்டிய ஒப்புதலுடனே அது செய்யப்படும்.

(h) கிரெடிட் கார்டு பயன்பாடானது பொருந்தும் சட்டங்களுக்கு உட்பட்டது, இந்தியாவுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் எந்தப் பரிவர்த்தனையும் அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் 1999-ன் படியும், ஆர்பிஐ வழிகாட்டல்களின்படியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யத் தவறினால் நீங்கள் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்னும் சட்டம் உள்பட ஆனால் இது மட்டுமே இல்லை. ஒழுங்குமுறை வழிகாட்டல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் வங்கியின் பொருந்தும் கொள்கைகளின்படி கிரெடிட் கார்டு பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்குடன், ஒரு கணக்கு அறிக்கைக் காலத்தில், அனுமதிக்கப்பட்ட வரம்பை தாண்டி அதிகளவு பயன்பாடு இருக்கிறதா, தேர்ந்தெடுக்கப்பட்ட சில வணிகர்களிடம் வழக்கத்துக்கு மாறான அல்லது அதிகப்படியான பயன்பாடு, வணிகருடன் சேர்ந்து கூட்டுச் சதி செய்வதற்கான வாய்ப்பு மற்றும்/அல்லது தனிப்பட்டதல்லாத/வணிகம் தொடர்பான நோக்கங்களுக்கான பயன்பாடு, பிறவற்றுடன் சேர்த்து, நியாயமற்ற வெகுமதிப் புள்ளிகளைச் சேர்த்தல்/கேஷ் பேக்/பிற அனுக்கூலங்களுக்காக அம்சங்கள்/சலுகைகள்/திட்டங்களின் அதிகப்படியான பயன்பாடு/தவறான பயன்பாடு என்பதைக் கண்டறிவதற்காக அவ்வப்போது சோதனைகளை நடத்தும் உரிமை வங்கிகளுக்கு உண்டு. பயன்படுத்தும் முறையின் அடிப்படையில், இவற்றில்

ஏதாவது இருப்பதாக வங்கி சந்தேகமடைந்தால், வங்கி அந்தக் கிரெடிட் கார்டு மீது தடை நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய நடவடிக்கை உடனடியாக செயல்படுத்தப்படுவதுடன், அது அம்சங்கள்/சலுகைகள் ஆகியவற்றைத் திரும்பப் பெறுவதுடன், அந்தக் கிரெடிட் கார்டின் இடைக்கால நிறுத்தம்/முழுமையாக ரத்து செய்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கலாம், ஆனால் இது மட்டுமே இல்லை. வங்கி அத்தகைய நடவடிக்கை எதையாவது எடுத்தால், கிரெடிட் கார்டு மற்றும் பொருத்தமானது என வங்கி கருதும், கிரெடிட் கார்டுடன் இணைந்த அம்சங்கள்/சலுகைகளை மீண்டும் செயலுக்குக் கொண்டுவருவதற்கு, நேர்மையான பயன்பாட்டுக்கான திருப்திகரமான ஆதாரத்தை வழங்கும் பொறுப்பு கார்டு மெம்பரையே சாரும். இது தொடர்பாக வங்கியின் முடிவே இறுதியானதாகவும் கார்டு மெம்பரைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

கார்டு அப்கிரேடு (**DBS Vantage card கார்டு தவிர பிற கார்டு வேரியண்ட்களுக்குப் பொருந்தும்**)
கார்டு வேரியண்ட் அப்கிரேடு செய்யும் நிகழ்வில், கார்டு வேரியண்ட் அப்கிரேடு செய்யப்படும் முன்பும், செய்யப்படும் சமயத்திலும், வங்கியானது கார்டு மெம்பரிடமிருந்து வெளிப்படையான ஒப்புதலை பெறவேண்டும்.

**(C) பில்லிங்** (**BILLING**)

(i) பில்லிங் கணக்கு அறிக்கை

கார்டு கணக்கில் ஏதாவது பரிவர்த்தனை அல்லது நிலுவை இருக்கும் ஒவ்வொரு பில்லிங் காலத்துக்கும், வங்கியானது கார்டுதாரரின் அஞ்சல் முகவரிக்கு ஒரு கணக்கு அறிக்கையை (இனிமேல் “கணக்கு அறிக்கை” எனப்படும்) மாதம் ஒரு முறை அனுப்பும். கார்டு கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் அறிக்கையை,, வங்கி பதிவு செய்து வைத்துள்ள அஞ்சல் முகவரி/மின்னஞ்சல் முகவரிக்கு ஒவ்வொரு மாதமும், குறிப்பிட்ட ஒரே தேதியில் வங்கி அனுப்பும். மின்னஞ்சலே கணக்கு அறிக்கைக்கான முதன்மை முறையாக இருக்கும். ஒருவேளை காகித வடிவ கணக்கு அறிக்கை வேண்டுமென்று கார்டுதாரர் வேண்டினால், வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரிக்கு அது அனுப்பப்படும். கிரெடிட் கார்டின் ஈ-அறிக்கைகளை மொபைல் செயலி அல்லது மின்னஞ்சல் மூலம் அணுகிப் பார்ப்பது கார்டு மெம்பரின் பொறுப்பாகும். இருப்பினும் அத்தகைய கார்டு மெம்பர்கள், அவர்களது அறிக்கையை ஆன்லைனில் அணுகி, ஈ-அறிக்கைகளை பெற முடியும். DBS சேவைத் தளங்களில் கோரிக்கையைச் சமரிப்பிப்பதன் மூலம் காகித வடிவ கணக்கு அறிக்கை வேண்டும் என்றும் கார்டு மெம்பர் கோரலாம். கார்டு மெம்பரின் தொடர்பு முகவரியில் ஏதாவது மாற்றம் இருப்பின், கணக்கு அறிக்கைகளைத் தொடர்ந்து சரியான நேரத்தில் பெறுவதற்கு, அவர்கள் வங்கியை உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அந்த கணக்கு அறிக்கையானது 12 மாதங்களுக்குக் கிடைக்கும், அதன் பிறகு அது வங்கியால் நீக்கப்படும். சேவைக் கட்டணம் செலுத்தினால், கணக்கு அறிக்கை நகல் வேண்டியும் கார்டு மெம்பர் கோரிக்கை வைக்கலாம், அது கட்டணங்கள் & கட்டணச் செலவுகளின் ஒரு பகுதியாகத் தெரிவிக்கப்படும்.

அறிக்கை உருவாகும் தேதியை, வங்கியின் தற்போதுள்ள கணக்கு அறிக்கைக் காலங்களில் ஒன்றாக மாற்றுவதற்காக மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்வதற்கு அல்லது போன் பேங்கிங் சேனல் மூலம் தொடர்புகொள்ளும் வாய்ப்பு கார்டு மெம்பருக்கு ஒரு முறை உண்டு. கிரெடிட் கார்டு மற்றும் MITC ஆகியவற்றின் காகிதப் பிரதியைப் பெறுவதற்கு, கார்டுதாரர்கள் மின்னஞ்சல் எழுதலாம் அல்லது போன் பேங்கிங் சேனல் மூலம் தொடர்பு கொள்ளலாம். கிரெடிட் கார்டு மற்றும் MITC

ஆகியவை வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள கார்டுதாரரின் அஞ்சல் முகவரிக்கு 7-10 நாட்களுக்குள் அனுப்பப்படும்.

(ii) செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை

DBS Bank கார்டு மெம்பர்களுக்கு ரிவால்விங் கடன் வசதி ஒன்றை வழங்குகிறது, அதில் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு குறைந்தபட்ச தவணைத் தொகையை (MAD) மட்டும் செலுத்துவதை கார்டு மெம்பர் தேர்ந்தெடுக்கலாம். மீதமுள்ள நிலுவைத் தொகை தொடர்ந்து வரும் கணக்கு அறிக்கைகளுக்கு எடுத்துச் செல்லப்படலாம். மொத்த நிலுவைத் தொகை (TAD) அல்லது MAD ஆகியவை கார்டு மெம்பரால் கட்டண தவணைத் தேதிக்கு முன் செலுத்தப்பட வேண்டும், அதுவும் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். MAD என்பது உங்கள் கார்டு கணக்கை நல்ல கிரெடிட் நிலையில் வைத்துக் கொள்வதற்காக நீங்கள் செலுத்தவேண்டிய குறைந்தபட்சத் தொகையாகும். முந்தைய கணக்கு அறிக்கைகளில் செலுத்தப்படாத குறைந்தபட்ச தவணைத் தொகை ஏதாவது இருந்தால், அது கார்டுதாரரின் தற்போதைய குறைந்தபட்ச தவணைத் தொகையில் சேர்க்கப்படும்.

குறைந்தபட்ச தவணைத் தொகை (MAD) என்பது புதிய கொள்முதல்கள் மற்றும் பணம் எடுத்தல்கள் மற்றும் முன்பு செலுத்தப்படாது நிலுவையிலுள்ள ஏதாவது அசல் + அந்த மாதத்துக்கான புதிய இஎம்ஐ பிடித்தங்கள் அல்லது முன்பு செலுத்தப்படாத ஏதாவது இஎம்ஐ பிடித்தங்கள் + ஜிஎஸ்டி + விண்ணப்ப கட்டணம் + அனுமதிக்கப்பட்ட கடன் வரம்புக்கு மேல் பயன்படுத்தப்பட்ட தொகை + முன்பு செலுத்தப்படாத MAD + 100% ரிவால்விங் வட்டி + பணம் எடுத்தலுக்கான வட்டியின் 100% + பிற கட்டணங்கள்/கட்டணச் செலவுகள், ஆகியவற்றின் 2% எனக் கணக்கிடப்படும். (குறைந்தபட்சம் ரூ.100 என்பதற்கு உட்பட்டது)

மொத்தம் செலுத்த வேண்டிய நிலுவை அல்லது MAD ஆகியவற்றின் ஒரு பகுதியை (எந்தச் சூழ்நிலையிலும் MADஐ விடக் குறைவாக இருக்கக்கூடாது) கார்டு மெம்பர் செலுத்தும் நிகழ்வில், மீதம் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை தொடர்ந்து வரும் கணக்கு அறிக்கைகளுக்கு எடுத்துச் செல்லப்படலாம். இந்தத் தொகையை முழுமையாகவும், இறுதியாகவும் செலுத்தி முடிக்கப்படும் நாள் வரை இதற்கு நிதியுதவி கட்டணங்கள் விதிக்கப்படும்.

முக்கியக் குறிப்பு: ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச கட்டணத்தைச் செலுத்தி வருவது, திருப்பிச் செலுத்தும் காலத்தை மாதங்கள்/வருடங்களுக்கு நீடிக்கச் செய்து, நிதியுதவி கட்டணங்கள் பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு, நிலுவையிலுள்ள உங்கள் தொகைக்கு ஒவ்வொரு மாதமும் பொருத்தமான தொடர் கூட்டு வட்டி விதிக்கப்பட வழிவகுக்கும்.

விளக்கம்: கார்டு மெம்பர் ஒருவர் ரூ. 5000 செலவு செய்துவிட்டு, ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச தவணைத் தொகையை மட்டுமே மிகச் சரியாகச் செலுத்தி வந்தால், நிலுவைத் தொகை மீது வட்டி விதிக்கப்பட்டு, திருப்பிச் செலுத்தும் காலம் அதன் விளைவாக 6 வருடங்கள் நீடிக்கும்.

எனவே, பணப்புழக்கம் இருக்கும்போதெல்லாம் கார்டு மெம்பர், குறைந்தபட்ச தவணைத் தொகையைவிட அதிகமான தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும்.

தாமதக் கட்டணத் தொகையைத் தவிர்ப்பதற்கு, கட்டண தவணைத் தேதியன்றோ, அதற்கு முன்போ DBS Bank கார்டு கணக்கில் MAD வரவு வைக்கப்பட வேண்டும். செலுத்தப்பட்ட தொகை கட்டண தவணைத் தேதிக்குள் கார்டு கணக்கில் காட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, கட்டண தவணைத் தேதிக்கு முன்பே உள்ளூர் காசோலைகளைப் போடுமாறு கார்டு மெம்பர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

கார்டு நிலுவைத் தொகைக்காகச் செலுத்தப்படும் கட்டணங்கள் அடுத்து வரும் கணக்கு அறிக்கைகளில் ஒப்புக்கொள்ளப்படுவதுடன், DBS Card+ செயலியில் நிகழ் நேர அடிப்படையில் காண முடியும்.
சர்ச்சை ஏதாவது இருப்பின் கணக்கு அறிக்கை தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் DBS Bank-க்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

**கட்டணங்களின் ஒதுக்கீடு** (பொருந்துவது ஸ்டாண்டர்டு மற்றும் அல்லாத NPA வாடிக்கையாளர்களுக்கு மட்டும்):

கார்டுதாரரின் நிலுவைக்காகப் பெறப்படும் கட்டணங்கள் ஜிஎஸ்டி-இன் 100%, கட்டணம், வட்டி (ரிவால்விங், பணம் & இஎம்ஐ), இஎம்ஐ அசலின் 100%, கேஷ் அட்வான்ஸ் & சில்லரை செலவுகள் என்ற வரிசையில் சரி செய்யப்பட்டு வரவு வைக்கப்படும்.

(iii) பணம் செலுத்தும் முறை

பின்வரும் முறைகளில் வங்கிக்குப் பணம் செலுத்தும் சலுகை கார்டுதாரருக்கு இருக்கிறது:

1. கிரெடிட் கார்டு மொபைல் செயலியைப் பயன்படுத்திக் கட்டுதல்: கார்டு மெம்பர் தங்களது வசதிக்கேற்ப DBS card + மொபைல் செயலியைப் பயன்படுத்தி கட்டணம் செலுத்தலாம். கார்டுதாரர் பிற வங்கிக் கணக்கைப் பயன்படுத்தி தங்களுடைய கணக்கை நிர்வகிப்பதுடன், அவர்களுடைய கார்டுக்கு உடனடியாகப் பணம் செலுத்தலாம்.

2. DBS Bank நெட் பேங்கிங் & மொபைல் பேங்கிங்: கார்டு மெம்பர் DBS Bank கணக்கு வைத்திருக்கும் நிகழ்வில், அவர்கள் DBS Bank நெட் பேங்கிங் அல்லது Digibank செயலியைப் பயன்படுத்தி கட்டணம் செலுத்தலாம்.

3. ஆன்லைனில் பணம் செலுத்துதல்: கார்டு மெம்பர் மற்ற வங்கி கணக்குகளைப் பயன்படுத்தி தங்கள் கிரெடிட் கார்டு கட்டணத்தை உடனடியாக செலுத்தலாம், தங்கள் கார்டு நிலுவைத் தொகையை செலுத்துவதுடன் அவர்கள் செலுத்தியதற்கான உறுதிப்படுத்தலை உடனடியாகப் பெறலாம்.

4. ரொக்கம்/காசோலையாக கட்டணம் செலுத்தல்: எந்தவொரு DBS Bank கிளையிலும் ரொக்கம்/காசோலையாக கட்டணம் செலுத்த முடியும். காசோலையானது DBS கிரெடிட் கார்டுக்கு செலுத்தத்தக்கதாக இருக்க வேண்டும் (அதைத் தொடர்ந்து 16 இலக்க கார்டு எண் இருக்கும்) , எகா. DBS கிரெடிட் கார்டு 1111 2222 3333 4444.

5. NEFT – கார்டுதாரர்கள் பிற வங்கி இண்டர்நெட் பேங்கிங் வசதியைப் பயன்படுத்திக் கட்டணம் செலுத்தலாம். பணப் பரிமாற்றம் செய்வதற்காக பயனாளிகள் பெயரை பதிவு செய்யும்போது, பயனாளிகள் பிரிவில் DBS கிரெடிட் கார்டு என்பதுடன் 16-இலக்க DBS கிரெடிட் கார்டு எண், IFSC - DBSS0IN0811, கிளை விவரங்களைச் சேர்க்கவும்.

6. IMPS - கார்டுதாரர்கள் பிற வங்கிக் கணக்கைப் பயன்படுத்திக் கட்டணம் செலுத்தலாம். பயனாளிகளைச் சேர்க்கும் சமயத்தில், பயனாளிகள் பிரிவில் DBS கிரெடிட் கார்டு என்பதுடன் 16-இலக்க DBS கிரெடிட் கார்டு எண், IFSC - DBSS0IN0811, கிளை விவரங்களைச் சேர்க்கவும்.

வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவை தவிர பிற முறைகளில் கட்டணம் செலுத்துவதைத் தவிர்க்க கார்டுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(iv) பில்லிங் சர்ச்சைகளுக்கான தீர்வு

ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், அறிக்கை வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள், DBS Bank-க்கு கார்டு மெம்பர் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்காதவரை, கணக்கு அறிக்கையில் உள்ள அனைத்தும் சரி என்றும், கார்டு மெம்பர்(களால்) ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் கருதப்படும், அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அனைத்தும் சரி என்றே கருதப்படும். eஏதாவது முரண்பாடு இருக்கும்பட்சத்தில், கட்டண சர்ச்சை ஒன்றை உங்கள் சார்பாகத் தொடங்குவதற்கு, வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள உங்களது மின்னஞ்சல் முகவரி/மொபைல் எண் மூலம் எழுத்துப்பூர்வமாகவோ, 24-மணி நேர வாடிக்கையாளர் சேவை எண் மூலமாகவோ வங்கிக்குத் தெரியப்படுத்துவது கட்டாயம் ஆகும். ஒருவேளை, மேற்கூறிய முரண்பாடுகள் முறையானவை என்று முதலாக வங்கியால் கண்டறியப்பட்டால், வங்கியானது முழுமையாகவும், இறுதியாக மன நிறைவு அடையும் வகையிலும் அடுத்தடுத்த விசாரணைகள் நிறைவடையும் வரை, விதிக்கப்பட்ட கட்டணத்தைத் தற்காலிகமாகத் திரும்பப் பெறக்கூடும். அவ்வாறு வங்கியால் நடத்தப்பட்ட விசாரணைகள், அத்தகைய (முரண்பாடுகள்) கட்டணங்களுக்கான பொறுப்பு கார்டு மெம்பர்(கள்)-ஐ சேர்ந்தது என்பதைக் காட்டினால், அந்தக் கட்டணமானது அடுத்த கணக்கு அறிக்கையில் மீண்டும் சேர்க்கப்படுவதுடன், இங்கு மேலே குறிப்பிடப்பட்டவாறு கட்டணங்கள்/கட்டணச் செலவுகள் வங்கியால் கோரப்படும். இங்குள்ள விதிகளைக் கணக்கில் கொள்ளாமல், வங்கியால் நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவை அந்தக் கார்டு மெம்பர்(கள்)க்குத் தெரிவிப்பதற்கு 60 நாட்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது. கீழே கூறப்பட்டுள்ள ஏதாவது வழிகளைப் பயன்படுத்தி, சர்ச்சை குறித்து கார்டு மெம்பர் வங்கியைத் தொடர்பு கொள்ளலாம்:

a. **மின்னஞ்சல்**: - உங்களுடைய கிரெடிட் கார்டின் கடைசி நான்கு இலக்கங்கள், பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் சர்ச்சையின் விவரங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்களது வாடிக்கையாளர் சேவை மின்னஞ்சல் முகவரிக்கு கார்டு மெம்பர் மின்னஞ்சல் அனுப்பலாம்.

| கார்டு வேரியண்ட் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|
| Bajaj Finserv DBS Bank SuperCard | cardcareindia@dbs.com |
| DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு | |
| DBS Spark கிரெடிட் கார்டு | |
| DBS Vantage கிரெடிட் கார்டு | vantagecareindia@dbs.com |

b. **கட்டணமில்லா தொலைபேசி எண்**: கார்டு மெம்பர், எங்களது 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை எண் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்களது வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை எண் மூலம் வங்கியைத் தொடர்பு கொள்ளலாம்:

| கார்டு வேரியண்ட் | வாடிக்கையாளர் சேவை எண் (இந்தியா) | வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை எண் |
|---|---|---|
| Bajaj Finserv DBS Bank Supercard | 1860 267 6789 | +91 4469046789 |
| DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு | 1860 267 6789 | +91 4469046789 |
| DBS Spark கிரெடிட் கார்டு | 1860 267 6789 | +91 4469046789 |
| DBS Vantage கிரெடிட் கார்டு | 1800 209 4555 | சிங்கப்பூர். 800 852 6186<br>பிற நாடுகள்: +91 44 6685 4555 |

(v) குறைதீர்வு மேல் முறையீடு – DBS Bank India Limited இல் உள்ள தொடர்பாக இருக்கும் நாங்கள், எங்களது மதிப்புக்குரிய வாடிக்கையாளரான உங்களுக்குத் தகுதியான மிகச்சிறந்த சேவையே உங்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

வங்கியின் குறை தீர்ப்புக் கொள்கை பின்வரும் கொள்கைகளைப் பின்பற்றுகிறது:

- வாடிக்கையாளர்கள் எல்லாச் சமயங்களிலும் நியாயமாக நடத்தப்பட வேண்டும்
.
- வாடிக்கையாளர்கள் கூறும் புகார்கள் மரியாதையுடனும், சரியான நேரத்திலும் கையாளப்பட வேண்டும்.
- வாடிக்கையாளர்கள் தங்களது புகார்கள் குறித்து வங்கிக்குள் மேல்முறையீடு செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும், அவர்களது புகார்களுக்கான தீர்வு குறித்து திருப்தியடையவில்லை எனில் அவர்களது உரிமைகள் குறித்தும், வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
- வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, வங்கி ஊழியர்கள் நல்லெண்ணத்துடனும், பாரபட்சம் இல்லாமலும் பணியாற்ற வேண்டும்.

எந்தவொரு நிலையிலும், எங்களது சேவை உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு இல்லை என்று நீங்கள் கருதினால், நீங்கள் செய்யக்கூடியது:

a. நிலை 1: எங்களது வாடிக்கையாளர் சேவை எண்ணை அழைப்பதன் மூலம் நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ள முடியும் அல்லது அதற்கென உள்ள மின்னஞ்சல் முகவரிகளில் எங்களுக்கு எழுதித் தொடர்பு கொள்ளலாம்.

b. நிலை 2: ஒருவேளை, நிலை 1இல் வழங்கப்பட்ட தீர்வு குறித்து உங்களுக்குத் திருப்தி இல்லை என்றால், முதன்மை தொடர்பு அதிகாரிக்கு எழுதி அல்லது கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பி நீங்கள் உங்கள் புகாரை மேல்முறையீடு செய்யலாம். உங்களுடைய தகவல்தொடர்புகளில், தயவுசெய்து உங்களுடைய கிரெடிட் கார்டின் கடைசி நான்கு இலக்கங்களையும், உங்களுடைய புகார் அல்லது கருத்தூட்டத்தின் விவரங்களையும் வழங்கவும்.

<table>
<tr><th>கார்டு வேரியண்ட்</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>மின்னஞ்சல் முகவரி</th></tr>
<tr><td>Bajaj Finserv DBS Bank Supercard</td><td rowspan="4">திருமதி அனிதா தீட்சித், முதன்மை நோடல் அதிகாரி, DBS Bank India Limited, 6வது தளம், ரூபி ஹவுஸ், ஜேகே சாவந்த் மார்க், தாதர் மேற்கு, மகாராஷ்டிரா 400028, இந்தியா</td><td rowspan="3">creditcardnodal@dbs.com</td></tr>
<tr><td>DBS SuperX கிரெடிட் கார்டு மற்றும் DBS SuperX Plus கிரெடிட் கார்டு</td></tr>
<tr><td>DBS Spark கிரெடிட் கார்டு</td></tr>
<tr><td>DBS Vantage கிரெடிட் கார்டு</td><td>DBSVantageNodal@dbs.com</td></tr>
</table>

மேலதிக விவரங்களுக்கு, பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும் வங்கியின் குறைதீர்ப்புக் கொள்கையை நீங்கள் பார்வையிடலாம்:

https://www.dbs.com/in/treasures/common/redressal-of-complaints-and-grievances.page

இழப்பீட்டுக் கொள்கை குறித்த மேலதிக விவரங்களுக்கு நீங்கள் பின்வரும் இணையதளத்தை பார்வையிடலாம்

https://www.dbs.com/in/iwov-resources/pdf/related-links/compensation-policy.pdf குறைதீர்ப்புக் கொள்கையானது, நீங்கள் புகார் செய்ய உதவும் வகையில் தொடர்பு விவரங்கள், காலக்கெடு, மேல்முறையீட்டு நிலைகள் ஆகியவற்றை வழங்கி உங்களுக்கு உதவும். ஒருவேளை வங்கி வழங்கும் தீர்வு குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடையவில்லை என்றால், இந்தக் கொள்கையானது குறைதீர் அலுவலரை (Ombudsman) தொடர்பு கொள்வதற்கான செயல்முறை குறித்தும் உங்களுக்கு வழிகாட்டி உதவுகிறது.

(vi) கார்டு வழங்குனரின் முழு அஞ்சல் முகவரி

DBS Bank India Limited, 6வது தளம், ரூபி ஹவுஸ், ஜேகே சாவந்த் மார்க், தாதர் மேற்கு, மும்பை, மகாராஷ்டிரா 400028, இந்தியா

**(D) தவறுதல் மற்றும் சூழ்நிலைகள் (DEFAULT AND CIRCUMSTANCES)**

(i) தவறுதல் ஏற்படும் நிகழ்வுக்கான நடைமுறை:

தவறுதல் ஏற்படும் நிகழ்வில், கிரெடிட் கார்டு கணக்கில் ஏதாவது நிலுவைத் தொகை இருப்பின் அதைச் செலுத்துமாறு, பின்வரும் ஏதாவது முறைகளைப் பயன்படுத்தி, கார்டு மெம்பர்களுக்கு அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்படும்: தபால், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் குறுந்தகவல், அல்லது வாட்ஸ்அப் போன்ற தகவல்தளம் மற்றும்/அல்லது தவணைகளை நினைவூட்ட, பின் தொடர மற்றும் வசூல் செய்ய, மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்தல். அவ்வாறு நியமிக்கபடும் எந்தவொரும் மூன்றாம் தரப்பினரும், அவ்வப்போது பொருந்தக்கூடிய, கடன் வசூலுக்கான நடத்தை நெறியை முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதாந்திர பில்லிங் அறிக்கைக்கும், கட்டண தவணைத் தேதி கடந்து பத்து நாட்களுக்குள் குறைந்தபட்ச தவணைத் தொகையை (MAD) செலுத்த கார்டுதாரர் தவறும்பட்சத்தில், வங்கியானது கார்டை தற்காலிகமாக முடக்கிவிட்டு, அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாமல் இருப்பதையும், கடன் தகவல் நிறுவனங்களிடம் (CIC)

கார்டுதாரரை கடன் செலுத்தத் தவறியவராக அறிவிக்கவிருக்கும் தனது நோக்கம் குறித்தும் கார்டுதாரருக்கு அறிவிக்கும். கட்டணம் செலுத்துவதில் ஏழு நாட்களுக்கு மேல் (கட்டண தவணைத் தேதியிலிருந்து) தாமதத்துக்காக கார்டை தற்காலிகமாக முடக்கி வைப்பதை, வங்கி தனது சொந்த விருப்பத்தின்பேரில் தாமதப்படுத்தலாம்.

கணக்கு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கட்டண தவணைத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் குறைந்தபட்ச தவணைத் தொகை (MAD)முழுவதையும் கார்டுதாரர் செலுத்தினால், கார்டு மீதான தற்காலிக முடக்கம் விலக்கப்படும். கணக்கு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கட்டண தவணைத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் ஒரு கட்டணம் செலுத்தத் தவறினால், வங்கியானது கார்டை நிரந்தரமாக முடக்கிவிடும்.

பின்வரும் ஏதாவது ஒன்று அல்லது மேற்பட்ட நிகழ்வுகள் தவறும் நிகழ்வை ஏற்படுத்துவதோடு, வங்கியானது தனது சொந்த விருப்பத்தின் பேரில் கிரெடிட் கார்டு வசதியைத் திரும்பப் பெறும். தவறும் நிகழ்வுகள் பின்வருமாறு:

- கிரெடிட் கார்டு பில்லிங் அறிக்கையில் குறிப்பிட்டவாறு கட்டண தவணைத் தேதிக்குள் குறைந்தபட்ச தவணைத் தொகையை செலுத்த கார்டுதாரர் தவறினால் முதல் தவறுதல் நிகழ்வு நிகழும்.

- கார்டு மெம்பர், வங்கிக்குச் செலுத்த வேண்டிய எந்தவொரு தொகையையும் நிர்ணையிக்கப்பட்ட 90 நாட்கள் காலத்துக்குள் செலுத்தத் தொடர்ச்சியாகத் தவறுகிறார்.

- கார்டு மெம்பர் ஒப்பந்தத்தின்படி தனது கடமைகளை நிறைவேற்ற கார்டு மெம்பர் தவறுகிறார்.

- வங்கிக்கு வழங்கப்பட்ட எந்தவொரு காசோலைகள் மற்றும்/அல்லது ECS/நிலையான அறிவுறுத்தல்கள் சமர்ப்பிக்கப்படும்போது/ செயல்படுத்தப்படும்போது எந்தவொரு காரணத்திற்காகவும் பணமாக்கப்படாமல்/நடவடிக்கை எடுக்கப்படாமல் இருத்தல்.

- கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட **குறைந்தபட்ச தவணைத் தொகை**, கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கட்டண தவணைத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்தப்படாமல் இருந்தால், ஒரு கிரெடிட் கார்டு கணக்கானது செயல்படாத சொத்து என்று கருதப்படும்..

(ii) சிறப்புக் குறிப்புக் கணக்கு (SMA) மற்றும் செயல்படாத சொத்து (NPA) என்று வகைப்படுத்தல்:

இந்தப் பிரிவானது, 'வருமான அங்கீகாரம், சொத்து வகைப்பாடு மற்றும் ஒதுக்கீடு மீதான முன்னெச்சரிக்கை விதிமுறைகள்- தெளிவுரைகள் மற்றும் அதற்கான திருத்தங்கள் (IRACP)' மீதான 12 நவம்பர், 2021 தேதியிட்ட ஆர்பிஐ சுற்றறிக்கையின் படி சிறப்புக் குறிப்புக் கணக்கு (SMA) மற்றும் செயல்படாத சொத்து (NPA) தொடர்பானது.

தவணைகள்: கிரெடிட் கார்டு கணக்கின் மீது விதிக்கப்படும் அசல்/வட்டி/ஏதாவது கட்டணங்களைக் குறிக்கும், அவற்றை கிரெடிட் வசதியை அனுமதிக்கும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் செலுத்தப்பட வேண்டும்.

ஓவர்டியூ: கிரெடிட் கார்டு கணக்கின் மீது விதிக்கப்பட்டு, கிரெடிட் வசதியை அனுமதிக்கும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் செலுத்தப்படாத

அசல்/வட்டி/ஏதாவது கட்டணங்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், எந்தவொரு கிரெடிட் வசதியின் கீழும் வங்கிக்கு செலுத்தவேண்டிய எந்தவொரு தொகையும், வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று செலுத்தபடவில்லை என்றால் அது ‘ஓவர்டியூ’ ஆகும்.

ஒதுக்கீட்டுக் கொள்கை: FIFO கொள்கை, அதாவது ‘முதலில் வருவது, முதலில் வெளியே’ கணக்கீட்டு முறை, SMA / NPA நிலையைத் தீர்மானிப்பதற்கான நாட்களின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்குப் பொருத்தமானதாக இருக்கும். கார்டு கணக்கில் நீண்ட நாள் செலுத்தப்படாமல் இருக்கும் தவணை முதலில் செலுத்தப்பட வேண்டும் என்று FIFO கொள்கை கருதுகிறது. இவ்வாறு FIFO முறையின்படி, கடன் வாங்கியவர் முதலில் வந்த தவணையை முதலில் செலுத்த வேண்டும்.

அதிக வயதான தவணையின் காலம்: மேற்கூறிய விளக்கத்தின்படி, அதிக வயதான தவணையின் காலம், அது செலுத்தப்படவேண்டிய, ஆனால் செலுத்தப்படாமல் இருக்கும் தேதியிலிருந்து கணக்கிடப்படுகிறது, 1 பிப்ரவரி’21-க்கான தவணைகள் 01.03.21 வரை செலுத்தப்படாமல் இருந்தால், 02.03.21 அன்று, அதிக வயதான தவணையின் காலம் 29 நாட்கள் என்று கணக்கிடப்படுகிறது.

வங்கியானது, கடன் கணக்குகளின் மீதான ஆரம்ப கட்ட அழுத்தத்தை, தவணை தவறுதல் ஏற்பட்டவுடன் அடையாளம் கண்டு, அவற்றை சிறப்புக் குறிப்புக் கணக்கு (SMA) என்று வகைப்படுத்தும். அவை SMA/ NPA என்று வகைப்படுத்தப்படுவதற்கான அடிப்படை பின்வருமாறு இருக்கும்:

| கிரெடிட் கார்டு கணக்கில் நிலுவை அல்லது அதன்மீது கூடுதல் கடன் (இங்கு குறிப்பிடப்படும் கிரெடிட் கார்டு தவணைகள் என்பது கார்டு கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தவணைத் தொகையாகும்) | |
|---|---|
| SMA துணை வகைகள் | வகைப்படுத்தலுக்கான அடிப்படை – அசல் அல்லது வட்டி செலுத்துதல் அல்லது வேறு ஏதாவது தொகை முழுமையாக அல்லது பகுதியளவு ஓவர்டியூ |
| SMA-0 | 30 நாட்கள் வரை |
| SMA-1 | > 30 நாட்கள், 60 நாட்கள் வரை |
| SMA-2 | > 60 நாட்கள், 90 நாட்கள் வரை |

செயல்படாத சொத்து: செயல்படாத சொத்து (NPA) என்பது ஒரு கடன் அல்லது முன்பணம் ஆகும், அதில்: வட்டி மற்றும்/அல்லது அசலுக்கான தவணை 90 நாட்களுக்கு மேல் ஓவர்டியூ ஆக இருக்கும் ஒரு கார்டு கணக்கு, கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தவணைத் தொகை முழுவதும், கணக்கு அறிக்கையில் கூறப்பட்ட கட்டண தவணைத் தேதியிலிருந்து 91 நாட்களுக்குள் முழுவதும் செலுத்தப்படாமல் இருந்தால் ஒரு கிரெடிட் கார்டு கணக்கு செயல்படாத சொத்தாகக் கருதப்படும்.

(iii) தவறுதல் அறிக்கையை திரும்பப் பெறுதலுக்கான நடைமுறை மற்றும் தவணைகள் செலுத்தப்பட்ட பிறகு தவறுதல் அறிக்கை புதுப்பிக்கப்படுவதற்கான காலம்:

- ஒரு கார்டுதாரர், கடன் செலுத்தத் தவறியவராக அறிவிக்கப்பட்ட பிறகு, தனது குறைந்தபட்ச தவணைத் தொகை அல்லது மொத்த தவணைத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டால், DBS Bank கடன் தகவல் நிறுவனங்களிடமிருந்து கடன் செலுத்தத் தவறியவர் என்ற அவரது நிலையை திரும்பப்பெறும். அத்தகைய மாற்றங்கள் கார்டுதாரரின் கடன் அறிக்கையில் தெரிவதற்கு, தவணைகள் செலுத்தப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் வரை ஆகலாம்.

கார்டுதாரர் ஒரு பரிவர்த்தனையை மறுக்கும் நிகழ்வில், கார்டுதாரர் மறுக்கும் தொகைக்கு இணையான தொகை தற்காலிகமாக கார்டுதாரரின் கடன் கணக்கிற்கு வழங்கப்படும்.

- வங்கியால் அல்லது அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில், கார்டு மெம்பர் ஒருவரை கடன் செலுத்தத் தவறியவர் அறிக்கையிலிருந்து நீக்குமாறு வங்கிக்கு அறிவுறுத்தி, வங்கிக்கு எதிராக ஒரு நீதிமன்றத் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. தனிப்பட்ட மீளாய்வுகளின் அடிப்படையில் ஒவ்வொரு வழக்குக்கும் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

(iv) தவறுதல் ஏற்படும் நிகழ்வில் மீட்புக்கான நடைமுறை:

தவறுதல் ஏற்படும் நிகழ்வில், பொருத்தமான அதிகார வரம்புள்ள பொருத்தமான நிதிமன்றம்/தீர்ப்பாயத்தில் சட்டபூர்வ நடவடிக்கையைத் துவங்குவதன் மூலம் வங்கியால் அந்தத் தொகையை மீட்க முடியும். வங்கியானது, பொருந்தும் சட்டங்களின் கீழ் வங்கிக்கு கிடைக்கும் உரிமைகள் மற்றும் தீர்வு வழிமுறைகளைப் பயன்படுத்தும், மேலும் அத்தகைய அனைத்து உரிமைகள் மற்றும் தீர்வு வழிமுறைகளும் ஒட்டுமொத்தமானவை என்பதுடன் மாற்று வழிகள் அல்ல, அவற்றை ஒரே சமயத்திலோ, தொடர்ச்சியாகவோ செயல்படுத்தலாம்.

(v) கார்டுதாரர் மரணம்/ நிரந்தர ஊனம் அடையும் நிகழ்வில் தவணைகளின் மீட்பு:

கார்டு மெம்பர் மரணமடைந்தாலோ, நிரந்தர ஊனமடைந்தாலோ, வங்கியானது வரவேண்டிய தொகையை மீட்டு, கணக்கின் நிலுவைகளை, கார்டு மெம்பரின் சட்டபூர்வ வாரிசு(கள்) உடன் சுமூகமாக தீர்த்துக்கொள்ள முயற்சிக்கும்.

நிலுவைத் தொகைகளை தாமதமாகச் செலுத்துதல்/செலுத்தாமை அடிப்படையில் ஒரு கணக்கு SMA பிரிவிலிருந்து NPA பிரிவிற்கு நகர்வதும், அதன்பின் நாள் முடிவு (EOD) செயல்முறையின் போது ஸ்டாண்டர்டு பிரிவிற்கு மேம்படுத்தப்படுவது தொடர்பான விளக்க உதாரணம் (லீப் வருடம் அல்லாத பிப்ரவரி மாதம் என்று கருதி): இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் தவணைகள், கடன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குறைந்தபட்ச தவணைத் தொகை/இஎம்ஐ தொகையாகும்.

| விளக்கம்: | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **கட்டண தவணை தேதி** | **கட்டணத் தேதி** | **கட்டணத்தில் உள்ளடங்குவது** | **அதிக வயதான தவணையின் காலம் நாட்களில் உள்ளடங்குவது** | **SMA 1 NPA வகைப்படுத்தல்** | **SMA ஆன தேதி /SMA வகை தேதி** | **NPA வகைப்படுத்தல்** | **NPA தேதி** |
| 01.02.22 | 01.02.22 | 01.01.22 வரையிலான கணக்கு அறிக்கையில் குறிப்பிட்டவாறு கட்டணத் தவணைகள் | 0 | ஒன்றும் இல்லை | பொருந்தாது | பொருந்தாது | பொருந்தாது |
| 01.02.22 | 01.02.22 | 01.02.22 இன் தவணைகள் செலுத்தப்படவோ, பகுதியளவு செலுத்தப்படவோ இல்லை | 1 | SMA-0 | 01.02.22 | பொருந்தாது | பொருந்தாது |
| 01.02.22 | 01.02.22 | 01.02.22 இன் தவணைகள் செலுத்தப்படவோ, பகுதியளவு செலுத்தப்படவோ இல்லை | 2 | SMA-0 | 01.02.22 | பொருந்தாது | பொருந்தாது |
| 01.03.22 | | 01.02.22 இன் தவணைகள் முழுமையாகச் செலுத்தப்படவில்லை 01.03.22-ம் 01.03.22 EOD இல் செலுத்தப்பட வேண்டி உள்ளது | 29 | SMA-0 | 01.02.22 | பொருந்தாது | பொருந்தாது |
| | | 01.02.22 இன் தவணைகள் முழுமையாகச் செலுத்தப்பட்டது, 01.03.22-க்கான தவணை 01.03.22-ம் EOD இல் செலுத்தப்படவில்லை | 1 | SMA-0 | 01.03.22 | பொருந்தாது | பொருந்தாது |
| | | 03.03.22- ம் EOD இல் 01.02.22 மற்றும் 01.03.22இன் முழுத் தவணையும் செலுத்தப்படவில்லை | 31 | SMA-1 | 01.02.22 / 03.03.22 | பொருந்தாது | பொருந்தாது |
| | | 01.02.22 இன் தவணைகள் முழுமையாகச் | 1 | SMA-0 | 01.03.22 | பொருந்தாது | பொருந்தாது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டது , 01.03.22-க்கான தவணை 01.03.22 இன் EOD இல் முழுமையாகச் செலுத்தப்படவில்லை | | | | | |
| 01.04.22 | | 01.04.22 இன் EOD இல், 01.02.22, 01.03.22 மற்றும் 01.04.22 இன் தவணையும் செலுத்தப்படவில்லை | 60 | SMA1 | 01.02.22 / 03.03.22 | பொருந்தாது | பொருந்தாது |
| | | 02.04.22 இன் EOD இல், 01.02.22 முதல், 01.04.22 வரையிலான தவணைகள் செலுத்தப்படவில்லை | 61 | SMA 2 | 01.02.22 / 02.04.22 | பொருந்தாது | பொருந்தாது |
| 01.05.22 | | 01.05.22 இன் EOD இல், 01.02.22 முதல், 01.05.22 வரையிலான தவணைகள் செலுத்தப்படவில்லை | 90 | SMA 2 | 01.02.22 / 02.04.22 | பொருந்தாது | பொருந்தாது |
| | | 02.05.22 இன் EOD இல், 01.02.22 முதல், 01.05.22 வரையிலான தவணைகள் செலுத்தப்படவில்லை | 91 | NPA | பொருந்தாது | NPA | 02.05.22 |
| 01.06.22 | 01.06.22 | 01.02.22-க்கான தவணைகள் 01.06.22 இன் EOD இல் முழுமையாகச் செலுத்தப்பட்டது | 93 | NPA | பொருந்தாது | NPA | 02.05.22 |
| 01.07.22 | 01.07.22 | 01.03.22 & 01.04.22 க்கான தவணைகள் 01.07.22 EOD இல் முழுமையாகச் செலுத்தப்பட்டன. | 62 | NPA | பொருந்தாது | NPA | 02.05.22 |
| 01.08.22 | 01.08.22 | 01.05.22 & 01.06.22-க்கான தவணைகள் 01.08.22 EOD இல் | 32 | NPA | பொருந்தாது | NPA | 02.05.22 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முழுமையாகச் செலுத்தப்பட்டன | | | | | |
| 01.09.22 | 01.09.22 | 01.07.22 & 01.08.22 க்கான தவணைகள் 01.09.22 EOD இல் முழுமையாகச் செலுத்தப்பட்டன | 1 | NPA | பொருந் தாது | NPA | 02.05.22 |
| 01.10.22 | 01.10.22 | 01.09.22 & 01.10.22 க்கான தவணைகள் முழுவதும் செலுத்தப்பட்டன | 0 | ஓவர்டியூ எதுவும் இல்லாத ஸ்டாண்டர்டு கணக்கு | பொருந் தாது | பொருந் தாது | 01.10.22 முதல் STD |

**(E) கார்டு மெம்பர்ஷிப் நிறுத்தம்/ரத்து செய்தல் (TERMINATION / REVOCATION OF CARD MEMBERSHIP)**

(i) கார்டுதாரர் கார்டை ஒப்படைப்பதற்கான நடைமுறை

a. கிரெடிட் கார்டில் உள்ள சிப்பை இரண்டாக வெட்டி பயனற்றதாக்கிவிட்டு, மேக்னெடிக் ஸ்ட்ரிப்பின் குறுக்கே பாதியாக வெட்டப்பட்ட கிரெடிட் கார்டுகளை, எழுத்துபூர்வ கோரிக்கையுடன் அல்லது வங்கியின் 24 வாடிக்கையாளர் சேவை எண்ணில் அழைப்பதன் மூலம் அல்லது கிரெடிட் கார்டு(கள்) உடன் தொடர்புடைய அனைத்து வசதிகள் மற்றும் சலுகைகளை நிறுத்துமாறு ஒரு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம், கார்டு மெம்பர் இந்த ஒப்பந்தத்தை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நிறுத்தலாம். வங்கிக்கு எழுத்துபூர்வ அறிவிப்பு தருவதன் மூலம் கூடுதல் கிரெடிட் கார்டு(கள்) பயன்பாட்டை முதன்மை கார்டு மெம்பர் ரத்து செய்ய முடியும், இருப்பினும், கூடுதல் கிரெடிட் கார்டு(கள்) பயன்பாடு காரணமாக எழும் கட்டணங்கள் அனைத்துக்கும் முதன்மை கார்டு மெம்பரே பொறுப்புடையவராக இருப்பார். வருடாந்திர கட்டணங்கள் மற்றும்/அல்லது பிற கட்டணங்கள் எதுவும் விகிதாச்சார அடிப்படையில் திருப்பித் தரப்படாது.

- மின்னஞ்சல்: -
    a. DBS Vantage கார்டுதாரர்கள் - VantageCareIndia@dbs.com உங்களுடைய கிரெடிட் காடு எண்ணுடன்

    b. பிற DBS கிரெடிட் கார்டுதாரர்கள் - cardcareindia@dbs.com உங்களுடைய கிரெடிட் காடு எண்ணுடன்

- கட்டணமில்லா தொலைபேசி எண்: எங்களுடைய 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை எண்ணில் கார்டு மெம்பர் வங்கியைத் தொடர்பு கொள்ளலாம்:

    a. DBS Vantage கார்டுதாரர்கள் - 1800 209 4555 அல்லது எங்களுடைய வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை எண்+9144 6685 4555 அல்லது கார்டு உதவிமையம் (சிங்கப்பூர்) - 800 852 6186

    b. பிற DBS கிரெடிட் கார்டுதாரர்கள்- 1860 267 6789 அல்லது எங்களுடைய வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை எண் +9144 69046789.

b. வங்கியானது தனது சொந்த விருப்பத்தின்பேரில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், காரணம் அல்லது நோக்கம் தராமலும், எவ்வித அறிவிப்பும் இல்லாமலும் கிரெடிட் கார்டு வசதியை நிறுத்தலாம் அல்லது அதன் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தலாம். கிரெடிட் கார்டு வசதியை வங்கி நிறுத்தும் நிகழ்வில், கார்டு கணக்கில் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளும் (இதுவரை பிடித்தம் செய்யப்படாத கட்டணங்கள் மற்றும் கேஷ் அட்வான்ஸ் உள்பட), உடனடியாகச் செலுத்த வேண்டிய தொகைகளாக மாறும். ரத்து செய்யப்பட்ட கிரெடிட் கார்டுகள் குறித்து அனைத்து நிறுவனங்களுக்கும் (கிரெடிட் கார்டு செல்லுபடியாகும்/ஏற்கப்படும் இடங்கள்) வங்கியானது தகவல் தெரிவிக்கும். ஒருவேளை கிரெடிட் கார்டு ரத்து செய்யப்பட்டால், அதைக் கண்டிப்பாகப் பயன்படுத்தக்கூடாது என்பதுடன், அது மேக்னெடிக் ஸ்ட்ரிப்பின் குறுக்கே பாதியாக வெட்டப்பட்டும், கிரெடிட் கார்டின் மீதுள்ள சிப் இரண்டு துண்டுகளாகவும் வெட்டி பயனற்றதாக்க வேண்டும். வருடாந்திர கட்டணங்கள் அல்லது பிற கட்டணங்கள் எதுவும் விகிதாச்சார அடிப்படையில் திருப்பித் தரப்படாது.

c. கார்டு மெம்பர் தனது வேலை, பணி அல்லது முகவரியை மாற்றினால், அல்லது தனது தற்போதைய பணியிடத்திலிருந்து மாறுதல் செய்யப்பட்டால் அல்லது தனது சம்பளக் கணக்கு/முதன்மை வங்கிக் கணக்கு (தகுந்தவாறு) மற்றும் பிறவற்றை மாற்றினால், தனது சொந்த விருப்பத்தின்பேரில் கிரெடிட் கார்டு வசதியை நிறுத்தும் உரிமை வங்கிக்கு உண்டு. கிரெடிட் கார்டு கணக்கு கணக்கு ரத்து செய்யப்பட்டால்/முடிக்கப்பட்டால், கிரெடிட் கார்டின் சிறப்புரிமைகள் (அனைத்து சலுகைகள் மற்றும் சேவைகள் உள்பட) நிறுத்தப்படும் என்பதுடன், அத்தகைய சிறப்புரிமைகள் மீண்டும் தரப்படுவது என்பது தானாகவே நடக்காது, அது வங்கியின் சொந்த விருப்பத்தின்பேரில் மட்டுமே நடைபெறும் என்று கார்டு மெம்பர் குறிப்பாக ஒப்புக் கொள்கிறார். கிரெடிட் கார்டு ரத்து செய்யப்படும்போது (எந்தவொரு காரணத்துக்காகவும்) கார்டு மெம்பர்:

- கார்டு மெம்பரின் கிரெடிட் கார்டு ஒருபோதும் பயன்படுத்தப்படாமல் இருந்தால் அல்லது 90 நாட்களுக்கு மேல் பயன்படுத்தப்படாமல் இருந்தால், அதன் சலுகைகளும் நிறுத்தப்படலாம்.

- கிரெடிட் கார்டை கட்டாயம் பயன்படுத்தக்கூடாது, கார்டை குறுக்காக பாதியாக வெட்டி, அதை வங்கியிடம் திருப்பித் தரவேண்டும்.

- கார்டை குறுக்காக பாதியாக வெட்டி, அதை வங்கியிடம் திருப்பித் தரும் வரை, கட்டணங்கள் செலுத்துவது உள்பட அதன் எந்தவொரு பயன்பாட்டுக்கும் பொறுப்புடையவராக இருப்பார்.

d. கிரெடிட் கார்டு பயன்பாட்டுக்கான நிபந்தனைகளின்படி, வங்கிக்குக் கட்டணம் செலுத்துவதைக் கட்டாயம் தொடர வேண்டும்.

(ii) ஒரு வருடத்துக்கு மேல் கார்டு பயன்படுத்தப்படாமல் இருந்தால், கார்டு கணக்கை முடிப்பதற்கான நடைமுறை

ஒரு கிரெடிட் கார்டு ஒரு வருடத்துக்கு மேல் பயன்படுத்தப்படாமல் இருந்தால், கார்டுதாரருக்கு தகவல் தெரிவித்த பிறகு, அந்தக் கார்டை முடிப்பதற்கான செயல்முறையைத் தொடங்க வேண்டும். 30 நாட்களுக்குள் கார்டுதாரரிடமிருந்து எந்தவொரு பதிலும் வரவில்லை எனில், கார்டுதாரர் அனைத்து கட்டணங்களையும் செலுத்துவதற்கு உட்பட்டு, அந்தக் கார்டு கணக்கு வங்கியால் முடிக்கப்படும். கார்டு

கணக்கு முடிக்கப்பட்டது தொடர்பான தகவல், அடுத்து வரும் மாதத்துக்கான அறிக்கையில் கடன் தகவல் நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

கார்டு கணக்கு முடிக்கப்படுவதைத் தொடர்ந்து, கிரெடிட் கார்டு கணக்குகளில் ஏதாவது இருப்பு மீதம் இருந்தால், கார்டுதாரரின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்படும். கார்டுதாரரின் வங்கிக் கணக்கு விவரங்கள் வங்கியிடம் இல்லை எனில், வங்கி அவற்றைப் பெறும்.

**(F) கார்டு தொலைந்துபோதல்/திருடுபோதல்/தவறாகப் பயன்படுத்தப்படுதல்.**
**(LOSS/ THEFT/ MISUSE OF CARD)**

(i) கார்டு தொலைந்துபோதல்/திருடுபோதல்/தவறாகப் பயன்படுத்தப்படுதல் நிகழ்வில் பின்பற்ற வேண்டிய நடைமுறை.. DBS Card+ மொபைல் செயலி அல்லது இணையதளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி கார்டு மெம்பர் உடனடியாக கார்டை முடக்க வேண்டும், மாறாக கார்டுதாரர் அழைக்க வேண்டிய 24x7 கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 209 4555, அல்லது VantageCareIndia@dbs.com (DBS Vantage Card)/ cardcareindia@dbs.com (பிற DBS கிரெடிட் கார்டுகள்) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது கிரெடிட் கார்டு தொலைந்துவிட்டால், திருடப்பட்டால், பெறப்படவில்லை என்றால், DBS Bank அல்லது வேறு ஏதாவது வங்கியின் ஏடிஎம்-இல் உள்ளே சென்றுவிட்டால் அல்லது அவரது அனுமதியின்றி தவறாகப் பயன்படுத்தப்பட்டால் கார்டுதாரர் அருகிலுள்ள DBS Bank கிளைக்குச் செல்லலாம். அதைத் தொடர்ந்து கிரெடிட் கார்டு முடக்கப்படும் மற்றும் ரத்து செய்யப்படும். கூடுதலாக, கார்டு தொலைந்துபோதல்/திருடுபோதல்/தவறாகப் பயன்படுத்தப்படும் நிகழ்வில், கார்டு மெம்பர் காவல்துறையில் புகார் செய்து/முதல் தகவல் அறிக்கை (FIR) நகல் ஒன்றை வங்கிக்கு அனுப்பவேண்டும்.

(ii) மேற்காண் நிகழ்வு (i) இல் கார்டுதாரரின் பொறுப்பு

(a) வங்கிக்கு அறிவிக்கும்/தகவல் தெரிவிக்கும் முன் ஏதாவது அங்கீகரிக்கப்படாத வகையில் கிரெடிக் கார்டு பயன்படுத்தப்பட்டால், வங்கிக்கு அறிவிக்கும்/தகவல் தெரிவிக்கும் வரை உண்டாகும் அனைத்து கட்டணங்களுக்குமான பொறுப்பு கார்டு மெம்பரைச் சார்ந்ததே, வங்கி அறிவிப்பைப் பெற்ற பிறகே அது “இல்லை” என்று ஆகும்.

(c) ஏதாவது சர்ச்சைக்குரிய பரிவர்த்தனை குறித்த விசாரணை ஏதாவது நடக்கும் நிகழ்வில், கார்டு மெம்பர் வங்கியுடன், அதன் பிரதிநிதிகள் மற்றும்/அல்லது சட்டபூர்வ அதிகாரிகளுடன் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

(d) கார்டு மெம்பர் கிரெடிட் கார்டை மீட்டும் நிகழ்வில் (திருடு போனதாக அறிவித்த பிறகு), மீட்கப்பட்ட கிரெடிட் கார்டை பயன்படுத்தக்கூடாது, அதைப் பாதியாக வெட்டி, உடனடியாக வங்கிக்குத் திருப்பித் தர வேண்டும்.

(iii) வெற்றியடையாத/தோல்வியடைந்த பரிவர்த்தனை

ஏதாவது காரணத்தால், பரிவர்த்தனை தோல்வியடைந்து, உங்கள் கிரெடிட் கார்டிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டிருந்தால், அந்தத் தொகையை பில் வழங்குபவர்/வணிகர் கோருவதற்கு 3 வேலை நாட்கள் காத்திருக்குமாறு உங்களிடம் நாங்கள் வேண்டுகிறோம். 3 வேலை நாட்களுக்குள் வணிகர் அந்தத் தொகையைக் கோரினால், பரிவர்த்தனை வெற்றியடைந்ததாகக் கருதப்படும்.

பரிவர்த்தனை தேதியிலிருந்து 3 வேலை நாட்களுக்குள் வணிகர் அந்தத் தொகையைக் கோரவில்லை என்றால், பரிவர்த்தனை தேதியிலிருந்து 5 வேலை நாட்களுக்குள் அது உங்களுடைய கிரெடிட் கார்டுக்கு திருப்பப்படும்.

**(G) தகவல் வெளியீடு (DISCLOSURE)**

(a) கார்டு மெம்பர், கடன் சரிபார்ப்பு அல்லது குறிப்பு சரிபார்ப்பு அல்லது வங்கியின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கங்களுக்காக, கார்டு மெம்பரைப் பற்றிய அனைத்து/ஏதேனும் தகவல்கள் அல்லது ஆவணங்கள், இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது வேறு ஏதேனும் ஒப்பந்தங்கள் உட்பட, அல்லது கார்டு மெம்பர் கட்டத் தவறிய விவரங்களை, இந்திய ரிசர்வ் வங்கி, வருமான வரித் துறை அதிகாரிகள், தீர்ப்பாயங்கள், நீதிமன்றங்கள், நீதித் துறை அமைப்புகள், பிற வங்கிகள், கடன் தகவல் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் மூன்றாம் தரப்பினருக்கு, அவ்வப்போது பொருந்தக்கூடிய தகவல் வெளியீட்டு விதிமுறைகளுக்கு இணங்க வெளிப்படுத்துவதற்கு வங்கிக்கு இதன்மூலம் வெளிப்படையாக அனுமதி அளிக்கிறார்.

(b) கார்டு மெம்பர் வெளிப்படையான ஒப்புதலை அளித்தால் மட்டுமே, கிரெடிட் கார்டு விண்ணப்ப படிவத்தில் அல்லது வேறுவிதமாக கார்டு மெம்பர் வழங்கிய தகவல்களை, கார்டு தொடர்பான சலுகைகளை விற்பனை செய்வதற்கு வங்கி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக அவ்வப்போது பயன்படுத்தலாம் என்பதை இதன்மூலம் ஒப்புக்கொள்கிறார், இதில் பேலன்ஸ் டிரான்ஸ்பர், இஎம்ஐ சலுகைகள், கேஷ் தொடர்பான சலுகைகள் மற்றும் காப்பீடு உள்ளிட்டவை அடங்கும், ஆனால் அவை மட்டுமல்ல. மேலும், பொருந்தகூடிய தகவல் வெளியீட்டு விதிமுறைகளுக்கு இணங்க, வங்கியின் பிற சேவைகளை சந்தைப்படுத்துவதற்கும் வங்கி அவ்வப்போது இந்தத் தகவலைப் பயன்படுத்தலாம். கார்டு மெம்பர்களை தொந்தரவு செய்யக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, வங்கியானது "அழைக்க வேண்டாம்" பதிவேட்டை பராமரிக்கிறது, சந்தைப்படுத்தல் சலுகைகள் எதற்காகவும் அழைக்கப்பட வேண்டாம் என்று கார்டு மெம்பர் விரும்பினால், அவர்களது தொடர்பு எண்ணைஅந்தப் பதிவேட்டில் சேர்ப்பதற்காக, அவர்கள் தொலைபேசி மூலம் 24 மணி நேர உதவி மையத்துக்கு தெரிவிக்கலாம் அல்லது cardcareindia@dbs.com என்ற முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பலாம். தங்களது தொடர்பு விவரங்களை விலக்க வேண்டி வங்கியின் இணையதளத்திலும் கார்டு மெம்பர்(கள்) பதிவு செய்யலாம்.

(c) வங்கியானது பாதகமான தகவல்களைப் பெறும் நிகழ்வில் (கார்டு மெம்பர்(கள்) உடைய கடன் தகுதித்தன்மை அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது குறித்து) வங்கியானது அந்த கிரெடிட் கார்டை ரத்து செய்யலாம், அந்த சமயத்தில் நிலுவைத்தொகை முழுவதும், மற்றும் கிரெடிட் கார்டு பயன்பாடு காரணமாக உண்டான கட்டணங்கள்/கட்டணச் செலவுகள், அவை கணக்கு அறிக்கையில் இதுவரையில் சேர்க்கப்படாமல் இருந்தாலும், அனைத்தும் அந்தக் கார்டு மெம்பர்(கள்)-ஆல் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டும்.

(d) கார்டு மெம்பர் பதிவு செய்துள்ள திட்டங்களை நிர்வகிக்க, சேவை வழங்க மற்றும் மேலாண்மை செய்வதற்காக, கார்டு மெம்பர் தொடர்பான தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் வங்கி பகிர்ந்து கொள்வதற்கான அதிகாரத்தை கார்டு மெம்பர் வழங்குகிறார்.

(e) இதற்கு மாறாக இருக்கும் எதையும் கருதாமல், கார்டு மெம்பர், இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது வேறு ஏதேனும் ஒப்பந்தம், கார்டு மெம்பர் மற்றும் வங்கிக்கு இடையேயான பரிவர்த்தனைகள் அல்லது தொடர்புகள் உட்பட, கார்டு மெம்பரரைப் பற்றிய அனைத்து/ஏதேனும் தகவல்கள் அல்லது ஆவணங்களை, எந்த நோக்கத்திற்காகவும் பின்வருவோருக்கு வெளிப்படுத்த வங்கிக்கு அனுமதி

அளிக்கிறார்: a. வங்கியின் தலைமை அலுவலகம் அல்லது வேறு ஏதேனும் கிளைகள், துணை நிறுவனங்கள் அல்லது தொடர்புடைய அல்லது இணை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு; b. வங்கியின் தொழில்முறை ஆலோசகர்கள்; c. வங்கியின் அல்லது அதன் வணிகங்கள், உரிமைகள், சொத்துக்கள் அல்லது கடமைகள் ஏதேனும் ஒன்றின் சாத்தியமான அல்லது உண்மையான வாங்குபவர்/ஒப்படைப்பாளர்; அல்லது d. சட்டத்தின்படி தகவல் வெளியீடு தேவைப்படும் வேறு ஏதேனும் நபருக்கு.

(f) Credit Information Bureau India Ltd. (CIBIL) என்பது இந்திய நிதி அமைப்பின் செயல்படும் தன்மை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆகியவற்றின் ஒரு முன்முயற்சியாகும். இது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்திற்கான திறன்மிக்க வழிமுறையை வழங்குவதற்கான RBI-யின் முயற்சிகளுக்கு ஏற்ப இருப்பதுடன், இதன்மூலம் கார்டுதாரர்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து சிறந்த கடன் நிபந்தனைகளைப் பெறுவதை இயலச் செய்கிறது.

(g) இந்த முன்முயற்சியில் பங்கேற்கும் வங்கிகள் அனைத்தும் கார்டுதாரரின் தரவுகளை, CIBIL மற்றும் பிற கடன் தகவல் அமைப்புடன் பகிர்ந்து கொள்ளத் தேவைப்படும். மேற்கூறியதன் அடிப்படையில், கார்டு மெம்பர்(கள்)/ஏட் ஆன் கார்டு மெம்பர்(கள்) கணக்கு தொடர்பான தரவுகளை, CIBIL மற்றும் பிற கடன் தகவல் அமைப்புகளுக்குத் தெரிவிக்கும்.

(h) தவறுதல் ஏற்படும் நிகழ்வில், கிரெடிட் கார்டு கணக்கு நிலையை “கடன் செலுத்தத் தவறியவர்” என்று கடன் தகவல் நிறுவனத்துக்கு வங்கியானது தகவல் தெரிவிக்கும். கடன் தகவல் நிறுவனங்களிடம் கார்டுதாரரை கடன் செலுத்தத் தவறியவராக அவரை அறிவிக்கவிருக்கும் நோக்கம் குறித்து கார்டுதாரருக்கு ஏழு நாள் அறிவிப்பு வழங்கப்படும்.

(i) வணிக நடைமுறைகள் மற்றும் பொருந்தும் விதிகளின்படி, வங்கி அவ்வப்போது தீர்மானிக்குமாறு தற்போதுள்ள அல்லது எதிர்கால கடன் அமைப்புகளுடன் கார்டு மெம்பர்(கள்)உடைய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது என்பதை கார்டு மெம்பர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். இந்திய நிதி அமைப்பு மற்றும் அத்தகைய பிற அமைப்புகளின் செயல்படும் தன்மை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, மேற்கூறிய தகவல்கள், தகுதியான அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட/அறிவிக்கப்பட்ட CIBIL அல்லது வேறு ஏதாவது கடன் தகவல் அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

(j) அறிவிக்கப்பட்ட கார்டு மெம்பர், பிற்பாடு, வங்கியின் திருப்திக்கேற்ப வங்கியுடனான அனைத்து நிலுவைகளையும் சரிசெய்துவிட்டால் அல்லது செலுத்திவிட்டால், அந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கும் விதமாக, அந்த கார்டு மெம்பரின் புதுப்பிக்கப்பட்ட விவரங்களை CIBIL அல்லது அத்தகைய பிற கடன் தகவல் அமைப்புகளுக்கு வழங்குவதை உறுதி செய்வதற்கான நியாயமான முயற்சிகளை வங்கி மேற்கொள்ளும்.

(k) UIDAI-யிலிருந்து KYC மூலம் பெறப்பட்டவாறு தகவல்கள்/விண்ணப்ப படிவம்(கள்)-இல் நான் வழங்கிய எந்த/அனைத்து தகவல்களையும், கடன் அமைப்புகள் /சட்டப்பூர்வ அமைப்புகள்/துணை நிறுவனங்கள்/இணை நிறுவனங்கள்/கடன் அமைப்புகள் /மதிப்பீட்டு முகமைகள், சேவை வழங்குநர்கள், வங்கிகள்/நிதி நிறுவனங்கள், அரசு/ஒழுங்குமுறை அதிகாரிகள் அல்லது மூன்றாம் தரப்பினருடன், KYC தகவல் சரிபார்ப்பு, கடன் இடர் பகுப்பாய்வு அல்லது DBS Bank பொருத்தமானதாகக் கருதும் பிற தொடர்புடைய நோக்கங்களுக்காக பகிர்ந்து கொள்ளவும், தகவல் வெளியிடவும் DBS Bank-க்கு நான் அனுமதி அளித்து ஒப்புதல் தருகிறேன்.

கார்டு மெம்பர், எந்தவொரு நிதி உதவி/வசதிகள்/நிதி/கடன் வசதி அல்லது அதன் மீதான வட்டி/கட்டணங்களின் அசல் தொகையை செலுத்துவதற்கு அல்லது திருப்பிச் செலுத்தத் தவறும் நிகழ்வில், செலுத்தத் தவறிய விவரங்கள் மற்றும் கார்டு மெம்பர்/அல்லது அதன் இயக்குநர்கள்/கூட்டாளிகள்/ஏட்-ஆன் கார்டு மெம்பர்களின் பெயர்களை, பொருந்தும்வகையில், கடன் செலுத்தத் தவறியவர்களாக, DBS Bank அல்லது RBI தங்களின் முழு விருப்பத்தின் பேரில் தகுந்ததாகக் கருதும் முறையிலும், ஊடகம் மூலமாகவும், தகவல் வெளியிட அல்லது பிரசுரம் செய்வதற்கு, DBS Bank மற்றும்/அல்லது RBI நிபந்தனையற்ற உரிமையைப் பெற்றுள்ளது. கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் 2005-ன் விதிமுறைகளின்படி கார்டு மெம்பரின் கடன் வரலாறு/திருப்பிச் செலுத்தும் முறை மற்றும்/அல்லது தவணை தாண்டிய நாட்கள் தொடர்பான தகவல்களை ஒரு கடன் தகவல் அமைப்புக்கு DBS Bank தகவல் வெளியிடும். கிரெடிட் கார்டுக்கான விண்ணப்பம் ஒன்றை ஏற்றுக்கொள்வது, கார்டு மெம்பரின் கடன் தகுதித்தன்மை குறித்த பாதக அறிக்கைகள் இல்லை என்பதன் அடிப்படையிலானதாகும். கார்டு கணக்கில் இருக்கும் ஏதாவது தவறுகள் அல்லது கார்டு மூலமாகவோ, வேறு விதமாகவோ கார்டு மெம்பரின் கடன் வசதி திரும்பப் பெறப்படுவதை DBS Bank-யானது பிற வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களுக்குத் தெரிவிக்கக்கூடும். பாதக அறிக்கைகளைப் பெறுவதன் அடிப்படையில் (கார்டு மெம்பர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களின் கடன் தகுதித்தன்மை தொடர்பானது), DBS Bank 15 நாட்கள் எழுத்துபூர்வ முன்னறிவிப்புக்குப் பின், கிரெடிட் கார்டை ரத்து செய்யலாம், அந்த சமயத்தில் நிலுவைத்தொகை முழுவதும், மற்றும் கிரெடிட் கார்டு பயன்பாடு காரணமாக உண்டான கூடுதல் கட்டணங்கள்/கட்டணச் செலவுகள், அவை கணக்கு அறிக்கையில் இதுவரையில் சேர்க்கப்படாமல் இருந்தாலும், அவை அனைத்தும் அந்தக் கார்டு மெம்பரால் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டும். தகவல் பெறப்பட்ட அல்லது தகவல் வெளியிடப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் பெயரை கார்டு மெம்பருக்கு வெளிப்படுத்த வேண்டிய கடமை DBS Bank-க்கு இல்லை.

**(H) பொறுப்புத்துறப்பு (DISCLAIMER)**

DBS Bank அல்லது அதன் இணை நிறுவனங்கள், மற்றும் அவற்றின் ஊழியர்கள், முகவர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள், நேரடியாகவோ, மறைமுகமாகவோ, விளைவாக, தற்செயலாக, எடுத்துக்காட்டு அல்லது சிறப்பு உட்பட எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கும் பொறுப்பாக மாட்டார்கள், இதில் வருவாய், லாபம், வணிகம், சேமிப்பு, தரவு அல்லது நல்லெண்ணம் இழப்பு, பயன்பாட்டு இழப்பு உள்ளிட்டவை அடங்கும், ஆனால் அவை மட்டுமல்ல, இவை முன்கூட்டியே எதிர்பார்க்கக்கூடியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஏதாவது ஒரு ஒப்பந்தம், குற்றச் செயல் அல்லது வேறு எதன் கீழ் எழுந்தாலும், தகவல் தொடர்பு அமைப்புகள், கட்டண அமைப்புகள் அல்லது வசதியை வழங்குவதற்குத் தேவையான மூன்றாம் தரப்பு சேவைகளின் தாமதம், இடைநிறுத்தம், கட்டுப்பாடு, இடைநிறுத்தம், செயலிழப்பு, தோல்வி அல்லது பிழையால் ஏற்பட்டாலும், அவற்றுக்குப் பொறுப்பாக மாட்டார்கள்.

எந்தவொரு சலுகை, சேவைகள், தயாரிப்புகள், பரிசுகள், வவுச்சர்கள், கேஷ் பாயிண்ட்கள், கார்டை ஆக்டிவேட் செய்வதற்கு அல்லது ரத்து செய்வதற்கு DBS Bank ஒருபோதும் கார்டு எண்/CVV/CVC/செக்யூரிட்டி குறியீடு, PIN, OTP அல்லது பாஸ்வேர்டு போன்றவற்றைக் கேட்காது. தொலைபேசி அழைப்பு/எஸ்எம்எஸ்/மின்னஞ்சல் மூலம் வரும் அதுபோன்ற கோரிக்கைகளை தயவுசெய்து நிராகரித்து விடுங்கள். கார்டு எண்/CVV/CVC/செக்யூரிட்டி குறியீடு, PIN, OTP அல்லது பாஸ்வேர்டு போன்றவற்றை வேறு எந்த நபரிடமும் பகிராமல் இருப்பதையும், வெளிப்படுத்தாமல் இருப்பதையும் நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

கிரெடிட் கார்டு ஆன்போர்டிங் செயல்முறையின்போது வங்கியுடன் பகிரப்படும் தகவல்தொடர்பு தகவல்கள் கிரெடிட் கார்டுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். வங்கியின் பிற சேவைகள் தொடர்பான தகவல்தொடர்பு தகவல்களை அப்டேட் செய்வதற்கு, கார்டுதாரர் வங்கியை தனியாக அணுக வேண்டும்.

எந்தவொரு பரிவர்த்தனையையும் தொடங்கும் முன் அந்த இணையதளம்/போர்ட்டலின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துங்கள். உங்களை ஏமாற்றும் போலி இணையதளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.